# எழுச்சி

60



O-,2NKT1,E
N53
103006

# எழுச்சி

★

குன்றத்தோளன்

★

தேன்கூடு பதிப்பகம்

திருமங்கலம், மதுரை மாவட்டம்.

முதல் பதிப்பு—1953

பதிப்புரிமை

★

விலை 10 அணா

★

ரத்னா அச்சகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

# பதிப்புரை!

தாழ்ந்த திராவிடத்திலே ஒரு தனி மலர்ச்சி ஏற்படுமா? ஏற்பட முடியுமா? பஜகோவிந்தப் பண்டார ஆதிக்கத்திலே வளம் பெறுவோமா?—என்றெல்லாம் சிந்தனை. அந்த சிந்தனை ஊற்றிலே பல பக்கங்களிலிருந்தும் பல்வேறு வகைகளிலே இன்ப நீர் சுரந்தது.

ஊற்றைச் சுற்றிலும் செல்லரித்துப்போன சமுதாயச் சாக்கடைகள், மதபோதைச் சிறு நீர்கள், சுரண்டி வாழும் காசப் பூச்சிகள், கொடுமை செய்யும் கிருமிகள்!—துயர் மிகுந்தது. என்றாலும் சுகம் தரும் மருந்து ஏராளமாக இருக்கிறது என்ற எண்ணம் 'எழுச்சி' தந்தது.

பதிப்பகத்தின் 2-ம் வெளியீடு இது. 'எழுச்சி' பிரசுரிப்பதற்கு எமக்கு உரிமை தந்த தோழர் குன்றத்தோளன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வணக்கம்.

**பதிப்பகத்தார்**

# அரங்கத்தில்!

| | |
|---|---|
| தமிழழகன் | ஏராளர் கழகத் தலைவன் |
| வீரப்ப முதலியார் | ஜமீன்தார் |
| விஸ்வநாத அய்யர் | கணக்கர் |
| எழிலழகன் | தமிழழகனின் தோழர்கள் |
| வல்லாளன் | |
| உழவன் | |
| அழகன் | வயல் வேலையாட்கள் |
| கருப்பன் | |
| வேலன் | |
| கந்தன் | |
| சிகப்பி | வேலனின் மனைவி |
| குமுதம் | முதலியாரின் ஆசைநாயகி |
| அமுதா | அய்யரின் மகள் |
| காசராமர் | அமைச்சர் |
| மொக்கயன் | கொலைகாரன் |

மற்றும்: சப்-இன்ஸ்பெக்டர், உழவர்கள், கிராமப் பெண்கள்...

# எழுச்சி

## காட்சி 1

[ஏர் பிடித்து உழுகின்றனர் உழவர்கள். பெண்கள் சிலர் களை எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.]

அழகன்: டே...கருப்பா...

கருப்பன்: என்னண்ணே!

அழகன்: இன்று மாலே கூட்டமாம்டா.

கருப்பன்: யாருண்ணே பேசுறது?

அழகன்: நம்ம தலைவர் தமிழழகன் தான்டா...!...வெளு வெளுன்னு வெளுப்பாரு! நம்ம ஜமீன்தார் மானம்....

வேலன்: மானமாவது, மண்ணாங் கட்டியாவது! மதிகெட்ட மமதையாளர்களுக்கு மானம் ஒரு கேடா!

கருப்பன்: டே...அழகா, இங்கே கேளுடா. அன்னிக்கி நடந்த கூட்டத்திலே, என்ன பேசி முடிச்சீங்க?

அழகன்: பாதி வாரம் போதாது, நிலம் நிலச்சுவான்தாரருக்கு இல்லே, உழுபவனுக்கே சொந்தம்னு சொன்னோம்.

கந்தன்: டே...டே...டே......அதென்னடா? முதலியார் ஒப்புக்கொண்டாரா? அவர் வயிறு எரியாதாடா?

அழகன்: எரியும்! வயிறு எரியத்தான் செய்யும்! நம்ம வயிற்றிலடித்து வாழ்ந்தவர்களின் வயிறு எரியத்தான் செய்யும்!

கந்தன்: பாதி வாரம் தர மறுப்பவர், உங்களுக்கு நிலத்

தையா தருவார்! போங்கடா வெட்டிப் பயல்களா...!

அழகன்: வெட்டிப் பயல்களல்ல, வீணர்களுமல்ல. கேட்கத் தான் போகின்றோம். மறுத்தால் போராட்டம்!

கதிரைக் களஞ்சியம் சேர்த்து, கண்டு களித்தோமே தவிர, உண்டு மகிழ்ந்தோமா? உழைத்தவர்கள் யார்? உண்டு மகிழ்பவன் யார்? உழைத்தவன் உலகத்தின் தாழ்வாரத்தில்!—உழைக்காது வாழ்பவன் உலகத்தின் மாடியில், உல்லாசபுரியில்! உழைத்தவனுக்கு உண வில்லை; உழையாது கொழுத்தவனுக்கு உணவு! கொள்ளை, கொள்ளை! இந்த அநீதியை எதிர்க்கத் தான் வேண்டும். வாழ்ந்தால் வளமாக வாழவேண்டும்; இன்றேல் உரிமைப் போர் செய்து மடியவேண்டும். கொடுங்கோன்மைக்கு ஒரு முடிவு கட்டியாகவேண்டும். என்னருந் தோழர்களே! போராட்டத்தில் பங்கு கொள்ளுங்கள். வெற்றி நமதே!

## காட்சி 2

[முதலியார் மனையில் விஸ்வநாத அய்யர் வந்துகொண்டிருக்கிறார்.]

விஸ்வநாத அய்யர்: முதலியார்வாள், வணக்கம்!

முதலியார்: ஓய் அய்யரே, என்ன புதுசாயிருக்கு! வணக்க மெல்லாம் ரொம்ப சுணக்கமாக வாயிலே நுழைகிறதே!

விஸ்வநாத அய்யர்: காலப் போக்கிலே போகவேண்டியது தானே. எல்லாப் பயல்களும் தமிழ் தமிழ்னு அடிச் சிக்கிறானுக. 'நமஸ்காரம்'ன்னு, நீ ஆரியன் போங் காணும் வெளியேனுட்டா—நம்ம பிழைப்பு?

முதலியார்: ஆரியக் கூத்தாடியானாலும் காரியத்தோட ஆடு கிறீரே! மெடிக்கல் காலேஜிலே உம் பிள்ளையைச் சேர்க்கப் பார்க்கிறீரோ? அதற்கு ஆரியன் இல் லேன்னு சொன்னால் மட்டும் போதாது!

விஸ்வநாத அய்யர்: பூணூலையும் கழற்றி எறிய நான் தயார்.

எப்படியாவது என் பிள்ளைக்கு காலேஜிலே இடம் கிடைத்தால் போதும்.

முதலியார்: அது இருக்கட்டும் ஓய்! நம்ம பண்ணைக்காரன்களெல்லாம் புரட்சி பண்ணப் போகிறான்களாம்! பாதி வாரம் வேண்டுமாம்! நிலம் நிலச்சுவான்தாருக்கு இல்லையாம்!

விஸ்வநாத அய்யர்: போராட்டமா? பார்த்துக்கொள்வோம் இந்தப் பசங்களை! அடி முட்டாள்கள்! அண்டி வாழும் ஆண்டைக்குக் கேடிழைப்பவர்கள்! துரோகிகள்! முதலியார்வாள், ஒரு யோசனை. அந்தப் பயல் அழகன்தான் இதற்கெல்லாம் காரணம். அவனைத் தொலைத்துவிட்டால்?

முதலியார்: அய்யரே, அருமையான யோசனை! அழகனைத் தொலைத்துவிட்டால் நாம் அஞ்சவேண்டிய அவசியமே இராது இனி. இதற்குத்தாங்காணும் அந்தக் காலத்திலே, அரசர்கள் ஆரியர்களை அருகில் வைத்துக் கொண்டது!

விஸ்வநாதஅய்யர்: (சிரித்துக்கொண்டே) முதலியார்வாள், இது மட்டுமா? தங்கள் கடாட்சம் இருக்குமானால் இன்னும் எத்தனையோ!

முதலியார்: அதிருக்கட்டும். நாளை மாலை கதிரவன் மலை வாயில் விழும்முன் அழகனின் தலை என் கழனியில் உருளவேண்டும். அவன் சிரத்திலிருந்து சிந்தும்செங் குருதி என் நிலத்தை அந்தி வானத்துச் செந்நிற மாக்கவேண்டும்!

விஸ்வநாத அய்யர்: உம்! (தலையைச் சொறிந்துகொண்டே) பணம்?

முதலியார்: என்ன பணம்தானே! (தன் இரும்புப் பெட்டியைத் திறந்து ஒரு நோட்டுக் கத்தையை அய்யரிடம் நீட்டுகிறார்.)

விஸ்வநாத அய்யர்: (புன்முறுவல் பூத்த முகத்துடன் இரண்டு கைகளையும் நீட்டி பணத்தைப் பெற்றுக் கொண்டே) முதலியார்வாள், உங்கள் மனசே மனசு! இப்படி மனிதர்களை உலகத்திலே காண்பதே துர்லபம். தங்களைக் கலியுக கர்ணனென்றே சொல்லவேண்டும்!

## காட்சி 3

[கொலைகாரர்கள் ரகசியமாக காதுக்குள் பேசிக்கொள்கிறார்கள். கணக்கர் சற்று சிந்திக்கின்றார். ஒரு முந்தியை ஏந்துகின்றான் கொலைகாரர்களின் தலைவன்.]

விஸ்வநாத அய்யர்: பணம்தானே? பரவாயில்லை. அவையெல்லாம் முதலியார் வீட்டுக் குப்பைக் கூடையிலே கொட்டிக்கிடக்கும் தாள்களப்பா, தாள்கள்! சொன்னபடி ஜோலியை முடித்துவையுங்கள், பிறகு எண்ணிக் கொடுப்போம். (கொள்ளைக் கூட்டத்தார் செல்கின்றனர்.)

[அய்யர் மறைகிறார். கிராமத்துப் பாதையில் சென்றுகொண்டிருந்த அழகனை முதலியாரின் கையாட்கள் கட்டாரியால் மார்பில் குத்தி வீழ்த்திவிட்டு ஓடுகிறார்கள். அழகன் ரத்தச் சேற்றில் புரளுகிறான். அழகனை வேலன் தன் மார்பில் சாய்த்துக் கொள்கிறான்.]

வேலன்: கொலை! கொலை! கோரக் கொலை!

முதலியார்: வெட்டுங்கள்...விரட்டுங்கள்...கூடிநிற்கும் சுண்டெலிகளைத் துரத்துங்கள். துடிக்கத் துடிக்க அடியுங்கள். 'போராட்டம்!' புல்லுருவிகளுக்குப் போராட்டம்! (முதலியாரும் கொலைகாரர்களும் மறைந்தனர்.)

அழகன்: என்னருமைத் தமிழ்நாடே! எடுப்பார் கைக் கோலாய் இருக்கும் திருநாடே! வஞ்சகத்தின் வாழ்

விடமாய், வந்தவர்க்கெல்லாம் உறைவிடமாய் இருக்கும் பொன்னடே! கோழையின் கொட்டடியாய், கொடுமையின் கூடாரமாய் திகழும் நாடே! வள்ளுவன் வாழ்ந்த வளநாடே! நீ மடிந்து போ! உன் மண்ணில் தவழ்ந்தேன்; கன்னித் தமிழ் பேசி ஆடிப் பாடினேன். இதோ சாகிறேன். பாட்டாளி மக்களின் உரிமைக்காக உன் மண்ணிலே மடிகிறேன். (அழகன் உயிர் விடுகிறன். வேலன் துக்கத்தோடு வேகமாக வீதிவழியே வருகிறன் )

வேலன்: கொலை!...கோரக் கொலை!...அழகன் கொல்லப்பட்டான்!

தமிழழகன்: ஆ!...கொலையா!...அழகன் கொல்லப்பட்டானு? அய்யோ! இந்த அநியாயத்தைச் செய்தவர்கள் யார்?

வேலன்: ஜமீன்தார் வீரப்ப முதலியாரும் அவருடைய கையாட்களும்!

தமிழழகன்: கொடும் பாவிகள்! குதித்து எழும் உள்ளத்தையா கொன்றுர்கள்! பாட்டாளியின் தோழன், படை வரிசையில் முதல் வீரன், அஞ்சாத நெஞ்சன், அருமைத் தொண்டன், கொல்லப்பட்டான்! உழைப்புக்கு கூலி, கொலை! அழகா, இன்று மடிந்தது நீயல்ல. உழைக்கும் வர்க்கம் மடிந்தது. உனக்குக் கொடுத்த உதை, தமிழனின் நெஞ்சிலே பாய்ச்சிய வாள். பணம்...திமிர்...அதற்கு இரையானுன் என் தமிழன்.

அடே, வீரப்பா! ஏழைகளின் வைரியே! உன் வாழ்வு என்றும் வளமுள்ளதாக, கொஞ்சும் குமரியோடு பஞ்சணையிலே மயங்கிக் கிடப்பதாக, இன்பத் தென்றலாக இருக்கவே இருக்காது. ஏழை கோழையல்ல. எரியும் எரிமலை. உள்ளம் கொதிக்கும் சுள்ளை. தென்றல்—புயலாகும். தித்திக்கும் தீஞ்சாறும் தெவிட்டினல்—விஷமாகும். கொஞ்சும் குமரியும்—மிஞ்சினல் நஞ்சாவாள்.

## காட்சி 4

[வீரப்ப முதலியார் தன் மாளிகையில் பஞ்சணையிலே அமர்ந்திருக்கிறார் குதூகலத்தோடு. அச்சமயம் அங்கு வருகின்றார் விஸ்வநாத அய்யர்.]

முதலியார்: வாரும், வாரும். அய்யர்வாள், வாரும். இன்றைய மார்க்கெட்டில் ஏதாவது புதுசு...?

விஸ்வநாத அய்யர்: கந்தப்பன் வீட்டுக் குட்டி...கண் விழியையும், கருங் கூந்தலையும் பார்த்தீர்களென்றால், அடடா என்ன அழகு! சொக்கிவிடுவீர்கள்.

முதலியார்: சுவைக்காத பழம், முகராத மலர், லவா லட்டுப் போல ஒன்று......

அய்யர்: அவள் மலரும் மொக்கு, கூண்டுத் தேன், பலாச் சுளை.

முதலியார்: அப்படியானால் இன்றைய விருந்து...

அய்யர்: அபாரமாய் இருக்கும்......

முதலியார்: மறந்துவிடாதீர்.

அய்யர்: முடித்தே விடுகிறேன்.

முதலியார்: அடுத்த வாரம் கோர்ட்டில் நம் வழக்கு.

அய்யர்: சதி வழக்குத்தானே! முதலியார்வாள், பயப்படாதீர்கள். பணத்தாலேயே அடிப்போம். 'பணம் பாதாளம்வரை பாயும்' என்று சொன்னவர்கள்கிறுக்கர்களா?

முதலியார்: மாபெரும் அறிஞர்கள்—பைத்தியக்காரர்கள்! பணம் இன்று என்னிடம், நாளை மற்றொருவரிடம் தானே!

அய்யர்: அம்பாள் அருள் இருக்கும்; கட்டாயம். என்னை நம்புங்கள். எதிர் தரப்பு சாட்சிகள் யார்?

முதலியார்: வேலன்தான் முதல் சாட்சி.

அய்யர்: சரிக்கட்டினல்...சரியாய்ப் போய்விடுகிறது. அவனை அழைத்துக் கேட்போம். கெஞ்சுவோம்—மிஞ்சினல் பணத்தை வீசுவோம். சம்மதிக்காவிட்டால் அதட்டுவோம். ஆர்ப்பரித்தால் அவன் தலையும் உருளவேண்டும். அவ்வளவுதான்!

முதலியார்: நல்ல யோசனை சொன்னீர். உமக்குத்தாங் காணும் மூளையிருக்கு. என்ன இருந்தாலும் பிராமணுள் பிராமணுளேதான்! அலாதிப் பிறவிகளல்லவா? உமக்கும் எனக்கும், மடுவுக்கும் மலைக்கும் உள்ள வேற்றுமைங்காணும். கருப்புச் சட்டைக்காரப் பசங்க 'ஆரியம் ஒழிக, ஒழிக'ன்னு கத்துரான்களே, அதிலே அர்த்தமேயில்லே.

அய்யர்: ஹி...ஹி......எங்கள்குலத்தைப்பற்றி இவ்வளவு பெருமைப்படுகிறீரே! இதற்காக என் உயிரைக்கூட உங்களுக்காக ...

முதலியார்: ஓய், உயிரை விட்டுத் தொலைத்துவிடாதேயும். பிராமணுள்தோஷம் என்னை வாட்டிவிடும். ஏற்கனவே ஒரு உயிரைக் குடித்துவிட்டோம். மேலும் ஒரு உயிருக்குத் திட்டமும் போட்டுவிட்டோம். உன் உயிரையும் விட்டுவிட்டால், நான் பெரும் பாபச் சின்னம்ஓய்! இனி நீர் எனக்கு கணக்கர்மட்டுமல்ல, தற்கால சாணக்கியருங்கூட......

அய்யர்: ரொம்ப சந்தோஷம். முதலியார்வாள், வேலனை அழைத்துவரச் சொல்லுங்கள்.

முதலியார்: ஆரம்பமாகிவிட்டதா உயிர் வாங்கும் படலம்?

அய்யர்: பல உயிர்களைக் கொன்று, எலும்புக் கூடுகளை அடுக்கடுக்காக அடுக்கி, அதன் உச்சியில் குந்தியிருப்பதுதான் ஆதிக்கம். பலர் வயிற்றிலடித்து, பணத்தை சுரண்டிக் கொழுத்தவன்தான்பணக்காரன். போரிட்டு மடிந்தவன், வாளால் வதைக்கப்பட்டவன், உடலெல்லாம் வடுக்கள் உள்ளவன்தான் வீரன். ஆயிரம்

தடவை தவறிழைத்துத் திருந்தியவன்தான் அறிஞன்.

முதலியார்: அருமையான விளக்கம். டே வீரா......!.......

வீரன்: என்னுங்க எஜமான், போய்வாரேனுங்க.

அய்யர்: அடே அவசரம்...

வீரன்: என்னுங்க! தாமதம்னு...?

முதலியார்: கேட்டுட்டுப் போடா......கழுதே...... அவர் இனி நமக்கு கணக்கர் இல்லேடா...

வீரன்: அப்ப இனி அவர் நம்ம வீட்டு வண்டிக்காரரா ?

அய்யர்: சீ நாய்க்குட்டியே, வாயை மூடு.

வீரன்: இங்கே பாரு, உன் அம்மாமிக் குறும்பை அக்ர காரத்திலே வச்சிக்கோ.

முதலியார்: டே . வீரா...இவர் இனி நமக்கு சாணக்கியர்.

வீரர்: புரிந்துவிட்டது!.........பங்காளிச் சண்டையை இழுத்துவிட்டு, அகப்பட்டதைச் சுருட்டிய ஆரிய புத்திரர் சாணக்கியரா?....எஜமான்,......சாணக்கியரிடம் ஜாக்கிரதையாக இருங்கள்! சாணக்கியரின் சதியாலே நந்த சாம்ராஜ்யமே சரிந்தது!

முதலியார்: அடக்கடா வாயை! அறிவுகெட்ட நாயே!... போய் அழைத்துவா வேலனை! (வேலன் போகிறான்.)

## காட்சி 5

[வேலனின் குடிசையில் வீரன்]

வேலன்: ஏது...இந்தப் பக்கம் ஒரு நாளும் இல்லாமல்.......

வீரன்: நம்ம ஜமீன்தார்-முதலியாரையா உன்னை அழைத்து வரச் சொன்னார்.

வேலன்: எதற்காக அண்ணே!......

வீரன்: ஏதோ ..அழைத்துவரச் சொன்னார். அவ்வளவு தான் நமக்குத் தெரியும். பெரிய இடத்துச்

சமாச்சாரமல்லவா?......அந்தச் சாணக்கியரும் பக்கத்தில் இருந்தார்.

வேலன்: அது யாரப்பா...சாணக்கியர்?.........

வீரன்: நம்ம கணக்கப்பிள்ளை அய்யருக்கு முதலியார் இட்ட பட்டப் பெயர் அது.

வேலன்: முதலியார் வீட்டில் விளக்கு ஏற்றவேண்டியதில்லை. குடும்பம் குட்டிச் சுவர்தான். அர்ச்சனைக்கு இறைத்து இறைத்து ஆண்டியாகவேண்டியதுதான்.

வீரன்: 'ஊரு கெட, நூலை விடு'ன்னு சும்மாவா சொன்னான்! சரி வேலா, நான் போய்வரட்டுமா?...

வேலன்: சரியண்ணா...போய்வா......

[வீரன் போனபின்பு]

வேலன்: சிகப்பி, என் கண்ணே! நான் போய்வரட்டுமா?

சிகப்பி: ஜமீனில் இருந்துல அழைப்பு வந்திருக்குது! அத்தான், கிடைக்கும் விருந்திலே எனக்குப் பங்கு...

வேலன்: கட்டாயம் உண்டு. மூட்டையாகக் கட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன். பாம்புப் புத்திற்குச் செல்கின்றேன். விருந்தா கிடைக்கும்!

சிகப்பி: கிடைத்தால் மறுத்து விடாதீர்கள்.

வேலன்: துண்டை எடுத்துவா, பிள்ளே...போய்வரட்டுமா?

சிகப்பி: இன்று தெப்பத்திற்கு நீராடச் செல்லவேண்டும். சீக்கிரம் வாருங்கள்.

## காட்சி 6

[ஜமீன் மாளிகையில், முதலியாரும் விஸ்வநாத அய்யரும் உட்கார்ந்திருக்கின்றனர். வேலன் வருகிறான்.]

வேலன்: எஜமான், வணக்கம்.

முதலியார்: வாப்பா வேலா, வா.

அய்யர்: எல்லாம் உன் தயவுதானப்பா!

வேலன்: அழைப்பு வந்தது......

முதலியார்: ஆம்...நான்தான் அழைத்தேன். அய்யர் சொல்வதைக் கவனி.

அய்யர்: வேலா! இந்த நேரத்தில் உன் தயவு தேவை. மறுத்துவிடாதே. நீ நல்லவன். நன்றி மறக்காதவன். உணவிட்டவனை, உயிர் உள்ளளவும் நினைப்பவன். முதலியாரின் உயிர் உன் கையில்தான் இருக்கின்றது. நாளை நடக்க இருக்கும் சதி வழக்கில் அவருக்குச் சாதகமாக நீ சாட்சியம்சொல்லவேண்டும். மறுக்காதே.

வேலன்: சாதகமாக சாட்சியம் சொல்லவேண்டுமா?...முடியாது. முடியவே முடியாது. உண்மையைச் சொல்வேன். நடந்ததை நன்ருகச் சொல்வேன். கண்கள் கண்டதைச் சொல்லுவேன். இந்த நாட்டு மக்களின் நல் வாழ்வுக்காகப் பாடுபட்டவன், உழைத்து உழைத்து உழலும் உழவனின் உள்ள நலிவு நீக்க வாழ்ந்தவன், ஏழை ஏற்றம் பெற எண்ணியவன், கொல்லப்பட்டான். கொலை செய்யப்பட்டான். இதை மறைப்பது அநீதி. மறுப்பது துரோகம்.

அய்யர்: எது துரோகம்? உண்ண உணவளித்தவனுக்கு சாதகமாக சாட்சியம் கூறுவது துரோகமா?...நீ உண்மையைச் சொல்வாயானல் உன் எஜமானருக்கு துரோகியாகின்ருய். அதோடு மட்டுமல்ல, ஒரு உயிர் மடிந்துவிடுகின்றது. கொலைகாரனகிவிடுகிருய். ஆகவே சிந்தித்துப் பார்.

வேலன்: சிந்திக்கவேண்டியது நானல்ல, தாங்கள்தான். உண்ண உணவிட்டார், மறுக்கவில்லை. ஆனல் உண்ண உணவளித்தது இனமாகவா? அல்லவே அல்ல. உழைத்தேன், உணவளித்தார். முதலியாருக்கு நான் துரோகி ஆகலாம். அதைப்பற்றி எனக்குக் கவலை

யில்லை. ஆனால் இந்த நாட்டிற்கு நான் துரோகியாக முடியவே முடியாது.

முதலியார்: வேலா! இங்கே பாரப்பா. இந்த நேரத்தில் உன் உதவி.........

வேலன்: தேவைதான்—காட்டை வெட்டுவதற்கு, நிலத்தை உழுவதற்கு, விதையை விதைப்பதற்கு. பொய் சொல்வதற்கல்ல! நெஞ்சறிந்த நீதியை மறைப்பதற்கல்ல!

அய்யர்: அறியாது பேசுகின்றாய். தாயைப் புணர்ந்து தந்தையைக் கொன்ற, கோட்புலி நாயனாருக்கு மோட்சம் கிடைக்கவில்லையா? ..காதல் கொண்டு கட்டியணைக்க வந்த காரிகையை, மூக்கையறுத்த இலக்குமணனுக்கு இலட்சார்ச்சனைகள் இல்லையா? அவர்களுக்கெல்லாம் இன்ப உலகக் கதவு மூடப்பட்டாவிட்டது? அவர்களெல்லாம் இன்று கடவுள்களப்பா, கடவுள்கள்!

வேலன்: கடவுள்! மோட்சம்!—சுயநலக்காரர்களின் சரக்கு, கட்டுக்கதை. உன் இனத்தார், எங்களவர்களை ஏமாற்ற விட்ட சரடு. ஆடையைத் திருடி அணங்குகளின் நிர்வாண கோலத்தைக் கண்டுகளித்த கோபாலனின் கீதையும், மனுநீதியும் உங்கள் இனம்வாழ வகுத்துத் தந்த வழி. கொடுமையை 'லீலை' என்றும் கொடுங்கோலர்களை 'அவதாரம்' என்றும்போற்றிப் புகழ்வது தானே உங்கள் பண்பு! மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான் அன்னார், உயிர் நீப்பர் மானம் வரின்—இது எங்கள் பண்பு.

அய்யர்: அதெல்லாம் தான்தோன்றிகளின் வெட்டிப்பேச்சு! —விளையாட்டுப் பொழுதுபோக்கு. நாளை நடக்கும் வழக்கில் நான் சொல்வதைச் சொல். பல வேலி நிலங்களுக்கு அதிபதியாவாய்.

வேலன்: பொய் சொல்லவா?

அய்யர்: உன்னைப் பொய் சொல்லச் சொல்லவில்லை. உதவி செய்யச் சொல்லுகின்றேன்.

முதலியார்: என் ஜமீனில் ஒரு பகுதி உனக்கு எழுதித் தருகின்றேன்.

அய்யர்: தேடிவரும் சிதேவியைத் தட்டிவிடாதே. உன்மேல் எனக்கு உள்ளன்பு உண்டு. எல்லாம் உனக்காகவே சொல்லுகின்றேன். மனம் மாறு.

வேலன்: கோடி கோடியாகக் கொட்டினாலும் குற்றம் குற்றமே!......இனி மனம் மாறப் போவதில்லை. மன மாற்றத்தை என்னிடம் எதிர்பார்ப்பது, முயலிடம் கொம்பைப் பார்த்ததாகும்—நாயிடம் நடனத்தைப் பார்த்ததாகும். என்னை வருத்தாதீர்கள்.

அய்யர்: கஞ்சிக்கு கிஞ்சியடிக்கும்போது, நாகரீகத்தைப் பற்றிப் பேசுவதிலே அர்த்தமுண்டா? வேலா, நீ வாழத் தெரியாதவன். உன் வாழ்நாளெல்லாம் பாடு பட்டாய். என்ன பலனைக் கண்டாய்? ஓட்டைக் குடிசையும், கிழிந்த கந்தலும், ஒட்டிய வயிறும்தவிர, உன் கையில் என்ன இருக்கின்றது? அடுத்த தெரு நாகலிங்கனாரைப் பார், பெரும் பணக்காரர்—அவ்வளவு பணத்தையும் அறவழியிலா சம்பாதித்தார்? மூட்டைப் பூச்சி போன்று ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்தார். குபேரரானார். அவர் என்ன, வாழவில்லையா? அவர்தான் இன்றைய வள்ளல், தமிழ் நாட்டின் தர்மர். உனக்கு புத்தியுண்டு, பிழைத்துக் கொள்ள. இந்தா, இதைப் பெற்றுக்கொள். (ஒரு பெரும் பணமுடிப்பைக் கொடுக்கிறார் அய்யர்.)

வேலன்: அடுக்கியகோடி ஆயிரம்பெறினும் குற்றம் குற்றமே. அநீதி அநீதியே! பிச்சைக் காசுக்குப் பல்லிளிப்பவன் தமிழன் அல்ல—பணத்திற்கு மானத்தை விற்பவன் தமிழன் அல்ல—நீதிக்காகத் தன் உயிரைக் கொடுத்தவன் தமிழன்—ஆண்டவனைக் காட்டி, அச்சுறுத்தினாலும் அநீதி அநீதியே என்று ஆர்ப்பரித்தவன்

தமிழன். பணமும், பதவியும் மனிதனின் மானத்தைப் போக்கிடும் பாம்புகள். விஷப் பாம்புகள் இருக்கும் இடம் இது. இங்கிருக்க எனக்கு எண்ணமில்லை. (உடனே வேலன், அவ்விடத்தை விட்டு வெளியே செல்ல காலெடுத்து வைக்கிறான்.)

அய்யர்: அடே....துரோகி. அடக்கு வாயை. கெஞ்சினால் மிஞ்சுகின்றாய். சாவை முத்தமிடப்போகின்றாய். உன் தலை ஜமீன்தார் வீரப்ப முதலியாரின் மண்ணிலே உருளும்.

வேலன்: (திரும்பி வந்து) உருளட்டும். உயிரைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அநீதியை எதிர்த்து மாண்டான் வேலன், என்று வரலாற்றில் பொறிக்கப்படும். அதற்காக மகிழ்கின்றேன். சாம்ராஜ்யங்களைச் சரித்து சந்திரகுப்தனைக் காட்டிக்கொடுத்து, அலெக்சாண்டரை அழைத்த, ஐந்தாம்படையாரின் சந்ததியாரே......! உமக்கு மிகுந்த வீரம்! விந்தையிலும் விந்தை! பூனை புலியிடம் வீரம்பேசுகின்றது! கோட்டான், குயிலிடம் கூவுகின்றது! புல்லேந்தும் கை வாளேந்துகிறதாம்! வெட்கம்! வெட்கம்! சாணக்கியரே!......மாடியிலே உலாவிடும், குமரியின் சொக்கிலே மயங்கி, மனம் மருண்டு அவளது செவ்விதழிலே, முத்தமிட்ட அதரங்கள்......மரணத்தையும் முத்தமிடும். சுக்ரீவனை விட்டு இராவணனைக் கொன்றது போல—இரணியனை, பிரகலாதனை ஏவிவிட்டுக் கொன்றதுபோல—என்னை என் இனத்தானை ஏவிவிட்டுத் தான் தகர்க்கமுடியும்—தாக்க முடியும்! உன்னால் முடியுமா?......முடியாது! ஏன் விழிக்கின்றாய்...!...இந்தா கம்பு. வா...சண்டைக்கு.

[அய்யர் பயந்து பதுங்குகின்றார்.]

புரிந்துவிட்டது. மரத்தின் மறைவிலிருந்து வாலியைக் கொன்றதுபோல என்னையும் மாய்க்கலாம். அது வீரம்

அல்ல. தமிழன் மடிந்தால், அவன் நெஞ்சிலே வடு இருக்கவேண்டும். கலிங்கத்தில் ரத்தக் கடலில் மிதந்த வன் தமிழன். கடாரத்திற்குக் கலம் செலுத்தி, குருதிக் கரை பட்டவன் தமிழன். வடநாட்டானின் வாதாபியை வென்று வாகை சூடியவன் தமிழன். கும்பினி ஆட்சியை எதிர்த்து குருதி கொட்டியவன் தமிழன். குள்ளநரிக் கூட்டத்தின் குமுறலுக்கு அஞ்சான்...... அஞ்சவே அஞ்சான். [ போகிறுன். ]

## காட்சி 7

[குமுறும் எரிமலையாக வந்துகொண்டிருக்கின்றுன் வேலன், மரங்களடர்ந்த பாதைகளிடையிலே. திடீரென்று மறைவிலிருந்து கிளம்பி வேலனைத் தாக்கிவிட்டு ஓடிவிடுகின்றனர், முதலியாரின் கையாட்கள்.]

வேலன்: ஆ!...அய்யோ !...அநியாயக்காரா...! ஏ, வீரப்பா! கொன்றுவிட்டாய் !......ஏழை வாழ வழியில்லை, எங்கும் தொல்லை. எதிர்த்துக் கேட்டால், எட்டி உதைக்கும் நிலை. கொள்ளை...கொலை. ஏழைத் தமிழர்களே ! எண்ணில்லாத் தோழர்களே !—வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் வீரர்களே! சூழ்ச்சிக்கும், சூதுக்கும் இரையாகும் என் தோழர்களே! ...கொதித்தெழுங்கள். அநியாயத்தை அழியுங்கள். காட்டையழித்து நாட்டை நிறுவினேம். மாடத்தைக் கட்டி கூடத்தை அமைத்தோம். நிலத்தைத் திருத்தி உணவுப் பொருள்களை விளைவித்தோம். கடலைப் பிளந்து கலத்தில் மிதந்தோம். முத்துக் குளித்தோம். ...மூச்சுத் திணறிப் பிணமாய் மிதந்தோம். சுரங்கத்தைத் தோண்டி தங்கத்தை எடுத்தோம். மண் சரிந்து மடிந்தோம்.

மாடத்திலே, வாழ்பவன் யார்? உழைக்காமல், உண்டு களிப்பவன் யார்? முத்து, முதலாளி வீட்டு

மூதாட்டி மார்பிலே! சந்தனம், அவன் சரிந்த உடலிலே!...சிகப்பி...!அடி என் அருமைக் காதலி!...... மலர்ச் சிரிப்பாலே என்னை மகிழச் செய்தவளே, என் வாழ்நாளெல்லாம் மணக்க வந்த மரிக்கொழுந்தே, உன்னை விட்டு நான் பிரிகின்றேன்! அய்யோ...இனி, உனக்கு உலகம் சூட்டும் பட்டம் விதவை...விதவை. (அமைதியாக) நீதி பிறழாத மன்னர்கள் வாழ்ந்த நிலமே, மகனைக் கொன்று நீதி தந்த மனுச் சோழன் வாழ்ந்த நிலமே! நீதி தவறினேம் என்றறிந்ததும் உயிர் நீத்த, நெடுஞ்செழியன் வாழ்ந்த நிலமே! உன் மண்ணிலே மடிகின்றேன். நீதிக்காக மடிகின்றேன். நான் சிந்தும் ரத்தக் கடலிலே, நீதிக் கப்பல் மிதக்கட்டும். (வேலன் உயிர் பிரிகின்றது; அந்தச் செய்தி எங்கும் பரவுகிறது. சிகப்பி வந்து அழுது புலம்புகிருள்)

சிகப்பி: அத்தான்!....அய்யோ!...அத்தான்! மடிந்தீர்...... மங்கையை விட்டு மடிந்தீர்! என்னைப் பிரிந்துவிட்டீர்! இனி மணமில்லாத மலர் நான். குரலிழந்த குயில் நான். விரிந்த உலகிலே காற்றுப்போல உலாவினேம். மாடத்தைக் கட்டி, குயிலழகர் தாங்கள் பாட, மயிலாள் நான் பாட எண்ணினேம். எத்தனையோ மனக் கோட்டைகள்...எல்லாம் தூள் தூளாயின. அத்தான்! அத்தான், இந்த அனாதையைப் பாருங்கள். நீங்களில்லா உலகு இவளுக்கு, கசக்கும் காய்—கொடும் விஷம்—வறண்ட பூங்கா—பாழடைந்த மண்டபம். இனி எனக்கு கதி, அலை மோதும் கடல், குளம், குட்டை. நாட்டுக்காக உழைத்தீர். ஏழை ஏற்றம் பெற எண்ணினீர். பணத்திமிரைச் சாடினீர். உங்கள்உடலிலிருந்து கொட்டிய குருதியைக் குடித்து, கொக்கரிக்கின்றது ஆதிக்கம். ஏழையழுத கண்ணீர்...கண்ணீரல்ல, அநியாயக்காரர்களை அழிக்கும் படை. அத்தான் அய்யோ அத்தான்! (சிகப்பி மூர்ச்சையாகிக் கீழேவிழுகிருள்.)

## காட்சி 8

[ஜமீன் மாளிகையில் முதலியார் தனிமையில்]

முதலியார்: இன்று மாலை விளக்கு வைக்கும் வேளை வருவதாகச் சொன்னாள்; இன்னும் காணவில்லை. கொஞ்ச நேரம் காத்திருப்போம். கோமளவல்லியாள், கோல முகம் காட்டி என்னைக் குதூகலிக்கச் செய்வாள். ஏதோ சத்தம் கேட்கிறதே!...அடி என் மென்நடை அன்னமே, உன் நடையொலிதானா?

அய்யர்: (களைத்துக்கொண்டே)அப்பாடா, அலுப்புத் தீர்ந்தது. பகீரதப் பிரயத்தனம்.

முதலியார்: அலுப்புத் தீர்ந்துவிட்டதா? இன்னும் அலுவல் இருக்குது ஓய்!...யமன் கையிலிருந்து தப்பியது போல...

அய்யர்: யமனுக்கு டிமிக்கியே கொடுத்தாச்சே! சித்திரபுத்திரன் கணக்கிலே, உங்களுக்குப்பதில் வேலனையல்லவா வரவு வைத்திருக்கின்றான்!

முதலியார்: அப்படிச் சொல்லும்! என்ன இருந்தாலும் ஆரியர் ஆரியரேதான். அபார மூளைப் பிறவிகள்! நீரெல்லாம் இந்த லோகத்திலே பிறந்திருக்கக்கூடாது ஓய்!...நாளை காலை குடியரசு விழா. நம் மாளிகையில் விருந்து...

அய்யர்: அபாரமாய் இருக்கவேண்டும்...ஒரு குட்டியைப் பிடித்து ஆடவைத்துவிட்டால்...?

முதலியார்: நீர் வரும்போதே ஒரு குட்டியை அழைத்து வாரும். ஆள் எப்படி இருக்கவேண்டும் தெரியுமா? .. அழகே உருவாக, அச்சில் வார்த்தது போல இருக்க வேண்டும்.

அய்யர்: அதற்கென்ன...நம்ம வீட்டு அமுதத்தை, அழைத்துவந்தால் எல்லாம் சரியாய்ப் போகின்றது.

முதலியார்: ஆகா!...பேஷாய் அழைத்துவாருங்கள். வேலை மிக விரைவில் செய்யவேண்டும். எல்லாம் உங்கள் பொறுப்பு. (முதலியார் பணத்தை எடுத்துத் தருகின்றார்.) போய்வருகின்றீரா?

அய்யர்: ஆஹா...எல்லாவற்றையும் முடித்துவைத்துவிட்டு நாளை வருகின்றேன். (போகின்றார்)

முதலியார்: (தனிமையில்) ஆடலிலே...ஊடல். அப்பாடா... சனியன் தொலைந்தது. பச்சைக் கிளிக்கு காத்திருந்தேன்! பஞ்சவர்ணக் கிளிக்கு அச்சாரம் போட்டு விட்டேன்! எந்தக் கிளி என் கண்ணில் சிக்கிரம் சிக்குகின்றதோ! (இந்தச் சமயத்தில் வேலைக்கார வீரன் அப் பக்கம் வரும் நடையொலியைக் கேட்டுத் தவறாக எண்ணி) வாழைத் தண்டே...வாம்மா...வா...!

வீரன்: சரிதான்.....கத்தரிக்காப் பிஞ்சேன்னு சொல்லப் படாது!

முதலியார்: அடே!...நீயா?

வீரன்: ஆம்பளை எல்லாம் உங்கள் கண்ணுக்கு பொம்பளை தான். ஹூம்...பணம் போற இடம் ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். கட்டும் முட்டுமா எங்கிருந்து தான் வருதுகளோ தினம்!...

முதலியார்: டே...வீரா!...அம்மாகிட்டே சொல்லிப்பிடாதேடா..

வீரன்: போங்க எஜமான்!...போங்க!...அந்தக் காலத்திலே அந்தப்புரங்களில் அணங்குகள் ஏராளம். இந்தக் காலத்து சிற்றரசர் நீங்கள்! —உங்களுக்கு மூன்று நாலாவது, வேண்டாமா?

முதலியார்: போடாக் கழுதே...லெச்சர் அடிக்கிறே..... (வீரன் காபியைக் கொடுத்துவிட்டுச் செல்கிறான்.) பிள்ளையாரைப் பூசை செய்யப் போய், பெருமாளைச் சேவித்தாற்போல இருக்கு. எல்லாம் நமக்கு இடஞ்ச

லாத்தான் வந்து சேருதுக. வேலைக்காரப் பயலுக்கு எவ்வளவு குறும்பு!... ஹூம்......மாலையில் வருவே னென்று சொன்னவள் ஏன் இன்னும் வரவில்லை? என் கூண்டை நாடிவந்த அக்கிளியை வேறொருவன் பிடித்துத் தன் கூண்டில் அடைத்துவிட்டானோ?

(அச்சமயம் ஜமீன்தார் எதிர்பார்த்திருந்த குமுதம் உள்ளே நுழைகிறாள்.)

முதலியார்: என் இன்பத் தென்றலே வருக! வருக! உன் வரவு நல்வரவாகுக! கோடையிலும் வீசிடும் குளிர் காற்றே! கொஞ்சும் மொழி பேசும் அஞ்சுகமே! கொடி கொழுகொம்பைத் தேடி வந்ததோ...?......

குமுதம்: ஆளைப் பாரு!...கொஞ்சம் குறும்புதான்!......

முதலியார்: மரிக்கொழுந்து வாடினாலும், வாடை போகுமா? இதோ பார்! உனக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது! (அருகில் நெருங்கி) என்ன வளவளப்பான முகம்...ரோசாக் கன்னம், அன்னம் நாணும் நடை. அடடடா என்ன அழகு! நான் கம்பனாயிருந்தால் நவரசம் சொட்டச் சொட்டப் பாடிவிடுவேன்.

குமுதம்: இப்படிச் சொன்னா நான் போய்விடுவேன். அவ்வளவுக்குப் பைத்தியமா நீங்கள்...!...நான் ரோஜாவுமில்லை ..அன்னமுமில்லை; அங்கத்தை அளந்து கம்பனால் காட்டப்பட்ட சிலையுமில்லை.

முதலியார்: ஆம் சிலையல்லதான். எழில் என்னும் கோலமிட்டு, அதன் மத்தியில் முத்துப் பதித்த சின்னம் நீ. அழகைக் குவித்து அதைச் சுற்றிலும் வண்ணமிட்ட வர்ணப் படம் நீ. (குமுதமும் முதலியாரும் ஆலிங்கனத்தால் இன்பக் கடலில் திளைத்திருக்கின்றனர்.)

## காட்சி 9

[விஸ்வநாத அய்யர், மனையில்]

அமுதா: என்னப்பா? கூப்பிட்டீர்களா?

அய்யர்: ஆம்! நாளை நம் ஜமீன்தார் மாளிகையில் குடியரசு

விழா! நீதான் ஆடவேண்டும். ஆட்டம் பிரமாதமாக இருக்கவேண்டும். உன் அங்க அசைவில் முதலியார் அப்படியே மூழ்கிவிடவேண்டும். புன்னகையும் கண் வீச்சும் இடியும் மின்னலும்போல இருக்கவேண்டும். மற்றதைச் சொல்லியா தரவேண்டும்!

அமுதா: மானைப்போல ஓடி, மயிலைப்போல தோகை விரித்தாடும் மயிலாட்டங்கூட ஆடுகின்றேன். இசையோடு கலந்து யாழும் இசைக்கின்றேன் என் கையால்; அமுதமாக இருக்குமப்பா...அ◦ருக்கு.

அய்யர்: ஆட்டத்திலே அமுதம் ஒழுகவேண்டும். ஆடை அலங்காரம் அற்புதமாய் இருக்கவேண்டும். அமுதா..........நம் குடிசை கூடாரமாவது உன் கையில்தானிருக்கிறது. மறந்துவிடாதே!...நம் எதிர்கால சுகபோக வாழ்வு, உன் மோகனப் புன்னகையில் தான் இருக்கின்றது நம் இன்பக் கோட்டைக்கு நீ தான் அஸ்திவாரம் போடவேண்டும்.

அமுதா: மீன் குஞ்சுக்கு நீந்தவா கற்றுக்கொடுக்க வேண்டும்? (இருவரும் சிரிக்கிறார்கள்.)

## காட்சி 10

[குடிசையில் சிகப்பி தனியே அழுதுகொண்டிருக்கிறாள். தமிழழகன் வருகிறான்.]

தமிழழகன்: அழாதே சிகப்பி. வேலன் வீர மரணமடைந்தான். அதற்காகப் பெருமைப்படு. நெளியும் புழு எப்பொழுதும் நெளிந்துகொண்டே இருக்காது. ஆந்தைக்கும் அமைதியுண்டு. தத்தும் தவளையும் குந்தியிருக்கும். புயல் என்றும் இராது—ஒரு நாளாவது தென்றல் வீசத்தான் செய்யும். மக்களாகப் பிறந்துவிட்டோம். என்றும் இன்பத்தைப் பெறமுடியாது. இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் வாழ்க்கை. வாழ்விலே இன்பம் ஓர் இடைவேளை. துன்பத்தைக் கண்டு அஞ்சுதல் கோழைத்தனம். எதிர்த்தல் வீரம்.

வீரர்களின் வரலாற்றைப் பார். ஒரே சூறாவளி. அமைதியுண்டா?...காணவே முடியாது. தில்லையாடி வள்ளியம்மையின் வழியில் வந்த நீ, கோழையல்ல. கண்ணகியின் வழியில் வந்த நீ, கண்ணீரைச் சிந்து வதா? உன் முன்னே பரந்து கிடக்கும் நாட்டிற்கு, நலிவுற்ற மக்களுக்கு உன் கடமையைச் செய். கவலைப் படாதே. இன்புற்றிருந்த நாட்களை எண்ணி மகிழ்.

சிகப்பி: அண்ணா!......உங்கள் தேறுதல் மொழி, எனக்குத் தெம்பையளிக்கிறது ஆனால் வாழ வழி...?

தமிழழகன்: இல்லைதான். இல்லையென்று கூறி இருமாந் திருக்கக்கூடாது. அதற்கான வழியை வகுத்துக் கொள்ளவேண்டியது நம் கடமை. வறுமையால் வாடும் மக்கள்—ஒரு கவளம் சோற்றிற்கு, நாயோடு போட்டி யிடும் மக்கள் —பிச்சைக் காசிற்குக் கெஞ்சித் திரியும் மக்கள்—மானத்தை விற்கும் மக்கள்—பாதைகளின் ஓரத்திலே, தெருக்களின் சந்திப்பிலே, கோயில்களின் சுற்றுப் புறங்களிலே, நொண்டியும்-முடமுமாய், கண் ணிழந்த குருடராய், பசியுடன் வாடும் மக்கள்—இவை தான் இன்றைய தமிழகத்தின் காட்சி. எடுத்துரைத் தால், அடக்குமுறை ஏன் என்று கேட்டால், சிறை வாழ்க்கை. துள்ளி எழுந்தால், துப்பாக்கி முனை. நீதி இல்லை; அநீதி பரப்பப்படுகின்றது நாட்டிலே. வள்ளு வன் தோன்றி வழங்கிய அகிம்சை, அசோகன்தோன்றி ஆர்ப்பரித்த அகிம்சை, காந்தியார் தன் கனவுலகிலே கோட்டை கட்டிய அகிம்சை அழிக்கப்படுகின்றது, ஆட்சியாளர்களால். அடக்குமுறை அவிழ்த்துவிடப் படுகின்றது. துள்ளியெழ வேண்டாமா, வீரத் தமி ழர்கள்? பாட்டாளிகள் படை படையாய்த் திரண்டு விட்டனர். ஆடவர் அணி அணியாய் வருகின்றனர். பெண்களும் தங்கள் கடமையைச் செய்யவேண்டும். பெண்களைத் திரட்டவேண்டும். அந்தப் பணியிலே நீங்கள் தொண்டாற்றவேண்டும். பெண்களைத் திரட்டி

O-, 2NK11,2
N53



நாட்டு விடுதலைக்கு நீ பாடுபடவேண்டும். அதுதான் வீரன் வேலனின் மனம் சாந்தி பெறச் செய்த சிறந்த செயலாகும். தொண்டாற்ற வரும் பெண்களுக்கு ஊதியம் தர, நம் ஏராளர் கழகம் முடிவு செய்துள் ளது. (தமிழழகன் போகிறான்.)

## காட்சி 11

[அய்யர் அமுதாவை அழைத்து வருகிறார். முதலியார் பார்வை ஆழமாகப் பதிகிறது.]

முதலியார்: சாணக்கியரே! இது யாரய்யா குழந்தே...?

வீரன்: குழந்தை இல்லீங்க எஜமான், குமரி!...!....

முதலியார்: அடக்கடா வாயை. அடக்கம், ஒடுக்கம் உன்னிடம் கொஞ்சங்கூட இல்லை. இன்றைய விருந்திலே வேலை விறுவிறுப்பாய் இருக்கவேண்டும். கவனமிருக்கட்டும்

வீரன்: சூறாவளிபோல் சுழல்றேனுங்க...!

அய்யர்: இவள்தான் என் மகள் அமுதம்...!...

முதலியார்: அமுதம்! ..பெயருக்கேற்ற அழகு. ஆட்டம் அருமையாக இருக்கும். கயல் விழி சுழல, காலில் சதங்கை கொஞ்ச, கரத்தில் வளை ஆட, நீ அபிநயம் பிடித்தால், அமுதம் ஒழுகும்; அன்னம் நாணும்; மயில் புறங் காணும்.

அய்யர்: சொல்லவா வேண்டும்!

முதலியார்: கொம்பிலே தொங்கும் கூட்டில், தேனைத் தவிர வேறு என்னதான் இருக்கும்?

அய்யர்: தித்திக்கும் தேனைத் தவிர கொட்டும் தேனீக்களும் இருக்கும்.

வீரன்: ஆமா இருக்கும்! சொல்லிப்பிட்டேன், ஜாக்கிரதை! உள்ளே இருக்கும் ஜாக்கிரதை.

முதலியார்: அமுதா கூட்டிலே தொங்கும் கொட்டாத

TAMILNADU ARCHIVES No. 103066

ராணித் தேனீ......ஹூம், நேரமாகிவிட்டது. இன்னும் விருந்தினர்கள் வரவில்லையா ?

அய்யர்: வருவார்கள். எல்லாம் நம் நண்பர்கள்தானே, வருவார்கள்.

முதலியார்: ஏன் நம் பண்ணையாட்கள் ?......

அய்யர்: வரமாட்டார்கள். குடியரசு விழா குபேரர்களின் விழாவாம். குடிசையில் வாழும் குப்பனுக்கு இல்லையாம். ஏழைகளைச் சுரண்டுவதற்கு ஏற்படுத்தப்பட்ட தில்லுமுல்லுதான் குடியரசு விழாவாம். இன்று அவர்களுக்குத் துக்க நாளாம். கருங்கொடி ஏற்றப் போகிறார்களாம் ஏராளர் கழகத்தில்.

முதலியார்: அவ்வளவுக்கு அறிஞர்களாகிவிட்டார்களா ? இன்னும் என்ன சொல்லுகின்றார்கள்....?...

அய்யர்: ஏற்கனவே உங்களைப் பற்றி ஊரெல்லாம், தப்பிதமான எண்ணம். நீங்கள் கொலைகாரனும், கொடுமைக்காரனும், ஏழை மக்களின் வைரியாம், பணத் திமிராலே உறுமுகின்றீர்களாம்......

வீரன்: ஓய்! அய்யரே, நீர் மட்டும் என்ன தர்மனுக்குத் தம்பியோ ?......

அய்யர்: தாத்தாடா......தாத்தா. முதலியார்வாள், ஊரார் பல சொல்லுவார்கள். உலகத்தைப் பற்றி நமக்குக் கவலையில்லை. கோழையை வீரனென்றும், கொள்ளைக்காரனைக் குபேரன் என்றும், கொடும் பாவியைக் கொடை வள்ளல் என்றும் கூறுவதுதான் உலகம். ஆட்டு மந்தையைப் போன்று சரியும் மக்களையுடையதுதான் உலகம்.

முதலியார்: ஆம்! பைத்தியக்காரர்கள் நிறைந்த உலகம்.

அய்யர்: இரண்டு கல்லூரிகளைக் கட்டி, நான்கு பொது ஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கி, கோயிலுக்கும் கும்பாபிஷேகம் பண்ணினல் இன்று மக்களால் வசைபாடப்படும் தாங்கள், அதே மக்கள் கூட்டத்தால்

வள்ளல் வீரப்பமுதலியார் என்றழைக்கப்படுவீர்கள். எல்லாம் காலப் போக்கிலே மாறிவிடும்.

முதலியார்: கலைக் கோயிலைக் கட்டுவோம். கல்லூரிக்குக் கல் நாட்டு விழாச் செய்வோம். இந்தத் துறையிலே இரண்டரை லட்சம் செலவானாலும் கவலையில்லை.

ஐயர்: இந்த முடிவை இன்றைய விழாக் கூட்டத்திலேயே விளக்கிவிடவேண்டும்.

முதலியார்: ஆமாம். இதுக்குக்கூடவா காலேஜிலே போய்ப் படித்து டிகிரி வாங்கனும்......அய்யர்வாள், ஏற்பாடு பண்ணுங்கோ, போங்கோ. (அய்யர் போகிறார்.)

## காட்சி 12

[ஏராளர் கழகத்தில் தமிழழகன் தினசரி வாசிக்கின்றான்.]

தமிழழகன்: "பஞ்சாபிலே வெள்ளம். பயிர்களுக்குச் சேதம் —தாம்பரபரணியில் தண்ணீர் இல்லை. இரண்டு லட்சம் ஏக்கரா நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன.—பர்மாவில் இந்த ஆண்டு நல்ல விளைச்சல். ஏராளமான அரிசி இருப்பில் இருக்கிறது. வாங்குவாரில்லை—இந்த ஆண்டு உணவுப் பஞ்சம். அரிசி இருப்பில் இல்லை டெல்லிக்கு தூதகோஷ்டி அனுப்பியிருக்கின்றனர், சென்னை சர்க்கார். இராமனாதபுர மாவட்டத்தில் பட்டினிச் சாவு. மக்கள் குடும்பம் குடும்பமாக வெளியேறுகின்றனர்"......

எழிலழகன்: பொன் பூக்கும் நாட்டிலே, ஓடும் ஆற்றிலே தண்ணீரில்லை. மாதம் மும்மாரி பொழிந்த நாட்டிலே மழையில்லை. வீரம் கொழிக்கும் மறவர் வாழும், பாண்டிய நாட்டில், பஞ்சம், பட்டினிச் சாவு. சமருக்கு அஞ்சாத தமிழன், கூர் வாளுக்கு இரையாகாத தமிழன் பட்டினிக்கு இரையானான். கடலில் மிதந்து, கடாரம் வென்ற வீரத் தமிழன், இன்று குடிக்கக் கஞ்சியின்றி குடி பெயருகின்றான்......

வல்லாளன்: இந்த அவமானத்தை இன்னும் சகித்திருக்க முடியாது. தமிழனைத் தட்டியெழுப்பி, இழிவை அகற்றவேண்டும். தன்மானத்தைக் காக்கவேண்டும்.

தமிழழகன்: பொறுங்கள், காலத்தை நோக்கியிருப்போம்.

எழிலழகன்: இதைவிட இன்னும் கீழான முறையில் தமிழன் உருக்குலைய வேண்டுமா? அதைப் பார்த்து நாம் களிக்கவேண்டுமா? துயரைத் துடைக்காத அமைச்சர்களை நாம் அகற்றத்தான் வேண்டும். நம் நாட்டைச் சுரண்டிக் கொள்ளையிடும், வட நாட்டானின் சுரண்டலைத் தடுக்கவேண்டும். அதற்கு வசதியளிக்கும் அரசியலமைப்பைத் தகர்க்கவேண்டும்.

தமிழழகன்: சொல்லவேண்டாம். காரியத்தில் செய்யுங்கள். மக்களிடத்தில் நாட்டின் நிலையை எடுத்துச் சொல்லுங்கள்.

எழிலழகன்: இதோ! செல்கின்றேன். (போகிறான்.)

சிகப்பி:- அண்ணா!...எவ்வளவோ, திறமையிருந்தும், செல்வத்தில் புரளும் வசதியிருந்தும், இந்த ஏழை மக்களை உங்கள் உள்ளம் எங்ஙனம் கவர்ந்தது...?...

தமிழழகன்: கல்லூரியில் படித்தேன். படித்தேனே தவிர, படிப்பில் என் மனமில்லை. சாலையும் சோலையும் மிக்க நாடு என்று ஏட்டிலே பார்ப்பேன். நாட்டைப் பார்த்தால் ஒரே வறட்சி. கொத்துக் கொத்தாய்க் கதிர்கள் விளைந்த நிலம், விண்டு வறண்டுபோயிருந்தது. கூடத்தைக் கட்டி, மாடத்தையமைத்து, அதிலே என் பாட்டனும் பாட்டியும் கொஞ்சி மகிழ்ந்தனரென்று ஏட்டிலேதான் இருக்கும். நாட்டிலே அவர்கள் வழி, கஞ்சிக்குவழியின்றி,ஓட்டைக்குடிசையில்தான்குந்தியிருக்கும். சந்தனம் மணக்கும் காடும், அகிலும் தேக்கும் அழியாக் குன்றமும், முத்துக் கொழிக்கும் கடலும் சூழ்ந்த நாடு, என்று கவிதையிலேதான் இருக்கும். நாட்டிலே இராது. வரலாற்றைப் புரட்டினேன். உன்

அண்ணன் ரோமுக்குப் பட்டாடை அனுப்பினான் என்றிருந்தது. என் ஆடைப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். எல்லாம் அகமதாபாத்தும், ஷோலாப் பூருமாகத்தானிருந்தன. இமயம்வரை சென்று வெற்றிக் கொடியை நாட்டினான், கடாரத்தை வென்றான் என்றெல்லாம் வீரம் உரைக்கும். இலங்கையும் ஒரு காலத்திலே, உன் மன்னனின் காலடியிலே, மண்டியிட்டது என்றிருக்கும். என்று? கரிகால் வளவனும், நெடுஞ்செழியனும் வாழ்ந்த அன்று. இன்று நீ வாழும் நாளில் தமிழன் இலங்கையிலே, மலேயாவிலே, தோட்டத் தொழிலாளி. – இடித்துக் காட்டுவதுபோல், கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது. மனம் நொந்தேன். துள்ளியெழுந்தேன். ஏட்டையும் புரட்டிக்கொண்டே போனேன். அசோகனும் அஞ்சிட வெஞ்சமர் செய்திட்டார் வீரத் தமிழர் என்றிருந்தது. மகிழ்ந்தேன். இந்தியா முழுவதும், தன் சாம்ராஜ்யத்தைப் பரப்பிய அசோகன், தென்னாட்டில் கால் எடுத்து வைக்கமுடியவில்லை என்றிருந்தது. களித்தேன். ஆடும் காற்றே! ஓடும் மேகமே!! உலாவும் நிலவே! என் அன்பைப் பாண்டியனிடம் சொல்லு என்று அசோகன் நாட்டிய தூணிலே, பொறிக்கப்பட்டிருந்தது. ஆடிப் பாடினேன். வானை நோக்கினேன். கொடிக் கம்பத்திலே கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. திகைத்தே போனேன். வெட்கப்பட்டேன். ஏ! தமிழா......நீ வீரனா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உன்னை ஆளமுடியாத நான் இன்று உன்னை ஆளுகின்றேன் — அடிமைப்படுத்தினேன் என்று கொக்கரித்தது அசோகச் சக்கரக் கொடி. கண்ணீரைச் சிந்தினேன். இளந் தமிழா, எழுந்திடடா! பூனையல்ல, புலிநிகர் தமிழன் நீ, என்று கூவியழைத்தேன். குமுறி யெழுந்தேன். தெருத் தெருவாய்ச் சென்றேன். உயர்ந்த மாடிகளைப் பார்த்தேன்.

வடநாட்டு சேட்டுகளும் பஜாஜ்களும், டால்மியாக்களும், கோயங்காக்களும் அங்கே உலாவக் கண்டேன். தமிழ் நாட்டிலே இவர்களுக்கு என்ன வேலை என்று கேட்டேன். 'சுரண்டல்' என்ற ஒலி பிறந்தது. வடநாட்டு ஆதிக்கம் ஒழிக என்றொரு கூட்டம் கூவியது. தொண்டாற்ற முன் வந்தேன்.

வல்லாளன்: தமிழகத்தில் அயலாரின் கொள்ளை மட்டுமல்ல, அம்மையாரே!.......அடுத்துக் கெடுக்கும் அநியாயக்காரர்களும், சூழ்ச்சியே வாழ்வாகக் கொண்ட சூதர்களும்; புராணத்தைக்காட்டி ஏமாற்றி, அதிலே அழகு செய்யப்படும் கடவுளைக்காட்டிப் போற்றி, மேலோகத்தைப் படம் பிடித்துக் காட்டி பயமுறுத்தும் காசக்கிருமிபோல் அழிக்கும், வஞ்சகர்கள் நிறைந்த நாடு. கோட்டையும் கொத்தளமும் கொண்ட மன்னர்களை, கோயிலைக் கட்டச் செய்து, பணப் பெட்டியைக் காலி செய்து, நாட்டையும், படை ஆற்றலையும் நம்பி வாழ்ந்த மன்னர்களை மந்திர சக்தியை நம்பச் செய்து மனித சக்தியிலே எண்ணமிழக்கச் செய்து ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர்கள் நிறைந்த நாடு.

சிகப்பி: நாடெல்லாம்...கோயிலும் கோபுரமும், கூடமும் மாடமும், கோட்டையும் கொத்தளமும், கோட்டையைச் சுற்றி அகன்ற அகழிகளும், மதம் ஒழுகும் யானைகளும், மத்தளங்களும் கொண்ட மன்னர்கள் இன்று எங்கே?...அவர்களின் பரம்பரை எங்கே?.... இல்லை......இல்லை...ஏதோ ஒரு சூழ்ச்சிக்காரக் கூட்டம் தன் கைத் திறனைக் காட்டியிருக்கின்றது.

வல்லாளன்: ஆம். ஆங்கிலேயனுக்குக் காட்டிக்கொடுத்த ஓமிட்சந்தின் கூட்டம்—நாய்க்கரை சதிசெய்த நாராயண பட்டரின் கூட்டம் – தஞ்சை மன்னனைக் காட்டிக்கொடுத்த வெங்கண்ணாவின் கூட்டம்—வீர மராட்டியரை மடியச் செய்த கோவிந்தஜீயின் கூட்டம்.

தமிழழகன்: இன்றையத் தமிழகம் ஒரு இருண்ட காடு. அதில் தத்தளிக்கும் குருடன்தான் இன்றைய தமிழன்.

சிகப்பி: குருடனுக்கு கண்ணாடியிட்டால், ஒளி பெறுவான்.

வல்லாளன்: தமிழன் குருடனல்ல. இருள் அவன் ஒளியை மறைக்கின்றது. இருட்டையகற்றவேண்டும், இரத்தத்தைச் சிந்தியாவது.

சிகப்பி: அகற்றத்தான் வேண்டும். கொடுமை சூழ் நாட்டிலே, வாழ்வதைக் காட்டிலும் மடிவதே மேல்.

## காட்சி 13

[ஏராளர் கழகத்தில்]

கருப்பன்: வணக்கம்! தம்பி! நேற்று மாலே ஜமீன் தாரையா வீட்டில் ஏகத் தடபுடல். குடியரசு விழா வாம். விருந்து, கேளிக்கையெல்லாம் நடந்தது. கணக் கய்யர் இருக்காரில்ல, அவரு மவா ஆடிச்சி. முதலியாரையா பேசினரு......

தமிழழகன்: என்னண்ணே பேசினரு...?

கருப்பன்: நம்ம பிள்ளேகளெல்லாம் படிக்கிறதுக்கு, கல்லூரி கட்டப் போகிருராம். அவருதான் தம்பி!...மந்திரி யாரு இருக்காருல்ல, அவரு நம்ம ஊருக்கு வந்திருந் தப்போ, போலீசுகாரரெல்லாம் தடபுடலாகப் பாராப் பண்ணினங்களே, அந்த மந்திரி, கட்டடத்திற்குக் கல் நடப் போருராம். நம்ம ஜமீன்தாரய்யாவுக்கு தாராள மனப்பான்மை வந்திருச்சி தம்பி. அறுத்த கைக்கி, சுண்ணும்பு தராதவரு—அன்னச் சத்திரம் கட்டப் போகிருராம். இந்தப் புத்தி நிலேச்சி இருக்கணும்னு எங்க குல தெய்வத்தைக் கும்பிடப் போறேன் தம்பி.

தமிழழகன்: நமது கண்ணே மறைக்கப் பார்க்கின்ருன். கடிக்க வரும் நாய்க்கு எலும்புத் துண்டை வீசி எறிகின்ருன்.

கருப்பன்: அப்படின்னு என்ன தம்பி...?

தமிழழகன்: இரண்டு உயிர்களைக் கொன்றவன். எண்ணிலடங்கா மக்களுக்கு இன்னல் விளைவித்தவன். கொலைகாரன். கன்னியர்களின் கற்பையழித்து, காமக் குளம் வெட்டி, அதிலே அபலைகளின் கண்ணீரை நிரப்பி, ஆழ நீந்துபவன். திருடன் பக்தன் வேடம் போட்டது போன்று, வேஷமிடுகின்றான். கொந்தளிக்கும் மக்களின் உள்ளத்தைக் குளிர்ச்சியூட்டப் பார்க்கின்றான். பொங்கி வரும் வெள்ளத்தை, பனிக்கட்டியால் அணை கட்டி தடுத்துவிடப் பார்க்கின்றான்! இவனுடைய ஏமாற்றுதலுக்கு, இறுமாந்து, இளிச்ச வாயர்களாகப் போவதில்லை.மக்கள் எதிர்க்கத்தான் போகின்றார்கள். எழுச்சி பெற்றுவிட்டனர் மக்கள். இனி அவர்களை ஏமாற்ற முடியவே முடியாது.

கருப்பன்: அப்படியா !......சங்கதி. எல்லாம் களவாணிப் பயலுக. ஏழைகள் வயத்திலே கை வைக்கிறதுக்கும் ஏமாத்துறதுக்கும் பாக்கிறானுங்க. போயிட்டு வரேன் தம்பி. என் தம்பி......இந்தப் புள்ளே...யாரு...?...

தமிழழகன்: நம்ம வேலன் மனைவி......சிகப்பி !

கருப்பன்: அட என் ராசாத்தி மவளே...!...அப்படியல்ல இருக்கணும். இங்கே என்னம்மா பண்றே ?

சிகப்பி: பெண்களுக்கு தொண்டு செய்கிறேன் அண்ணு !

கருப்பன்: அப்படிச் சொல்லு சிங்கக் குட்டி!......இனிமேல் நம்ம பொம்பளைகளுக்கெல்லாம் கிழக்கு வெளுத்தாப் போலதான்......வேலன் எவ்வளவு நல்லவன். அவனுக்கெல்லாம் இந்த லோகத்திலே இடம் இல்லேன்னு எமதர்ம ராசா அழைச்சிக்கிட்டாரு. நானும்தான் அவர் கண்ணுல படலெ. ஹூம்...எவ்வளவு நாளைக்கித்தான் மண்ணை வெட்டி கஷ்டப்படறது ! சிகப்பி, போயிட்டு வரட்டாம்மா...!....

சிகப்பி: போய்வாருங்கள் அண்ணு !...

தமிழழகன்: குள்ளநரிக் குட்டிகள் கூச்சலிடும் காடாகிவிட்டது தமிழ் நாடு. நிலைமை மோசமாகிக்கொண்டே போகின்றது. துருப்பிடித்த இரும்புக்கு மெருகிட்டுப் பார்ப்போம்......

சிகப்பி: மெருகின் மினுமினுப்பு சில நாட்களுக்குத்தான் !- நீடித்திராது.

தமிழழகன்: எரியும் விளக்கிற்கு எண்ணெய் வார்ப்பது போல் மீண்டும் மீண்டும் கொடுப்போம்.

சிகப்பி: தொல்லையான காரியம். நாட்டிலே அமைதி இராது. மக்களும் மனம் சோர்வர். நம் இயக்கத்தின் அச்சாணியும் நொருங்கும். குள்ளநரிக் குட்டிகள் உலாவ வசதி செய்தவர்களாவோம்.

தமிழழகன்: ஒரே மூச்சில் எல்லாம் நொருங்கவேண்டும். இதுதானே உன் எண்ணம்......

சிகப்பி: ஆம் !

தமிழழகன்: சிந்திக்கவேண்டிய செய்தி....சிகப்பி! நீ குறுகுறுவென்று பார்க்கின்றாயே....அந்தப் பார்வை என் நெஞ்சிலே வேலைத்தான் பாய்ச்சுகின்றது. நீ சிமிட்டிச் சிமிட்டி விழிக்கின்றாயே, அது என் உள்ளத்திலே வேட்கையைத்தான் கிளப்புகின்றது......கண்ணே.

சிகப்பி: அண்ணு, என்ன உளறுகிறீர்கள்...?...

தமிழழகன்: சிகப்பி...என்மேல் கோபமா? மன்னித்துவிடு. பளிங்குக் கற்களால் மாளிகை கட்டி, அதன்மேல் மாடியமைத்து, பொன்னால் இழைக்கப்பட்ட ஊஞ்சலிலே நீயும் நானும் ஆடுவோம். சந்தனக் கூண்டிலே நாமிருவரும் கொஞ்சிப் பேசி மகிழ்வோம். ஒரு காம்பிலே இருக்கும் இரு மலர்களைப் போன்று, ஒருவரை ஒருவர் கண்டு களிப்போம். இது என் கனவு. எதிர்காலத் திட்டம். கனவு நினைவாகுமா?...

சிகப்பி: அண்ணு! கனவு நினைவாகுமா? எவ்வாறு ஆகும்? கண்ணிலே தோன்றி மறையத்தானே செய்யும். மறந்து விடுங்கள்.

தமிழழகன்: தாகத்தாலே வாடுபவன், நீர்ச் சுனையை மறப்பானு? மழலை பொழியும் குழந்தை, பாலுண்ண மறக்குமா?—குவ்வா குவ்வா என்று அழத்தானேசெய்யும்.

சிகப்பி: அண்ணு என்று அழைத்தேன். அந்த அழகுத் தமிழின் பண்பிற்குப் பங்கம் காணப் பார்க்கின்றீரே.

தமிழழகன்: அத்தான் என்ருெரு அழகுத் தமிழில் நல்ல பண்பும் உண்டு என் கண்ணே!......

சிகப்பி: தங்களை வேலியென்று நினைத்தேன். வேலியே பயிரை மேய்ந்தால் ..?...

தமிழழகன்: நான் வேலியல்லவே...சிகப்பி என்னும் சிறந்த ஓவியத்தைத் தீட்டி, அதன் எதிரில் நின்று கண்டு களிப்பவன். காந்தத்தால் சுட்டுண்டு, அதன் கவர்ச்சியிலே சுழலுகின்றேன். என் உள்ளத்தை அரங்காக்கி விட்டாய், கண்ணில் கருமணிபோல் கலந்துவிட்டாய், உன்னை நான்......

சிகப்பி: கல்லூரியிலே கற்ற இளங் கொடிகள், செல்வத்தில் புரளும் சிமாட்டிகள், எத்தனையோபேர் உளர். இந்த அபலையை மறந்துவிடுங்கள்.

தமிழழகன்: என் அகமெல்லாம் இனிக்கச் செய்யும் தேன் உன்னிடமல்லவா இருக்கின்றது! மின்னி ஒளிக்கும் மின்மினிகள் அவர்கள்; வானிலே வட்டமிடும் வெண்ணிலவு நீ. தேய்ந்து தேய்ந்து வளரும் சிறுமதி அவர்கள்; குறைவில்லாப் பரிதி நீ.

சிகப்பி: பகட்டுச் சொற்களுக்குப் பஞ்சமே இல்லை.

தமிழழகன்: அன்னத்தைக் கண்டவர்கள் ஆமையின் நடையிலே அழகைக் காணுவரா?...அன்பே,என்னைப் பார். என் நெஞ்சின் துடிப்பைப் பார்...ஒப்புதலைக் காட்ட

சிரிப்பைச் சிந்திப் பார்......

சிகப்பி: உலகம் நம்மைத் தூற்றும், வேசி என்று பட்டம் சூட்டும்......

தமிழழகன்: அறியாமையிலே மூழ்கிக் கிடக்கும் இந்த உலகம், நம்மைத் தூற்றத்தான் செய்யும். புதுமையைக் கண்டு மிரளத்தான்செய்யும். பழமையிலே மூழ்கிக் கிடக்கும் மக்களுக்குப் புதுமை இனிக்காது. அறிவே கடவுள் என்று கூறிய சாக்ரடீஸுக்கு ஒரு கோப்பை நஞ்சைப் பரிசாகத் தந்த இந்த உலகம். அன்பே கடவுள் என்று கூறிய இயேசுவுக்கு, சாவைப் பரிசாகத் தந்தது இந்த உலகம். எம்மதமும் சம்மதமே என்று கூறிய காந்தியாரின் மார்பிலே மூன்று குண்டுகளைப் பாய்ச்சியது இந்த உலகம். தூற்றுதலுக்கு அஞ்சோம். நம்மை எதிர்த்து வரும் கண்டனக் கணைகளையெல்லாம், நம் புகழ் ஏறும் படிக்கட்டுகளாகக் கருதுவோம்.

சிகப்பி: ஊருக்கு உபதேசி, உள்ளம் உளுத்த பரதேசி என்று பாடும்......

தமிழழகன்: பாடட்டும்...நன்றாகப் பாடட்டும். ஊருக்குக் காட்டினோம், விதவையின் கொடுமையை; கொடுமை தீர வழியையும் காட்டினோம். வாயாலே சொல்லியதை செயலிலே காட்டுகின்றோம். உலகுக்கு மட்டும் உபதேசிக்கவில்லை, உண்மையிலே நடந்தும் காட்டுவோம். புதுமை உலகம் நம்மைப் போற்றும், புரட்சித் தம்பதிகள் என்று வாழ்த்தும்......(சிகப்பியின் முகத்திலே ஆனந்தம் துள்ளியது.)

## காட்சி 14

[ஜமீன் மாளிகையில்]

முதலியார்: டே.. வீரா...இன்று நம் மாளிகைக்கு மந்திரியார் வருகின்றார்: நிதானமாக நடந்துகொள்.

வீரன்: நம்ம நாட்டை ஆளுகிற மந்திரியாரா!... குட்டிமகா ராஜாவுல அவரு......

(இச்சமயம் மந்திரியார் காசராமர் வருகின்றார்.)

முதலியார்: வணக்கம்...வாருங்கள்.

மந்திரி: வணக்கம். நலந்தானே!...உங்களை தேர்தல் சமயத்திலே பார்த்தது......

முதலியார்: குடியரசு விழாவன்றுகூட ஒரு வாழ்த்து அனுப்பியிருந்தேனே......

மந்திரி: ஆம், எவ்வளவோ வேலை. இதற்கிடையிலே வேடிக்கைக்கும் விருந்திற்கும் போய்வருவதென்றால்......... இருந்தாலும் உங்களைப் போன்ற வேண்டியவர்களின் அழைப்பைத் தட்டமுடியவில்லை.

அய்யர்: முதலியாரின் பண்ணையிலே வேலை செய்கின்ற ஆட்கள் மிரட்டுகின்றனர். பாதி வாரம் வேண்டுமாம். மறுத்தால் போராட்டமாம்......எதை எ தை ய ோ உளறுகின்றார்கள். சங்கம் அமைத்திருக்கிறார்கள். படித்துவிட்டு ஊர் சுற்றும் சோம்பேறிகள், பட்டம் பெற்றுவிட்டு வேலையில்லாமல் திரிபவர்கள், அதற்குத் தலைவர்கள்.

முதலியார்: ஆம், இந்தப் பயல்கள், பெரிய இடஞ்சல்பண்ணு கிறார்கள். வாயில்லாப் பூச்சிகள் போன்று நாய்போல் என்பின் வந்தவர்களை, ஏவிவிட்டுக் குறையைக் குற்றமாக்கி, மக்களிடையே மதிப்புப் பெற்றுவிட்டார்கள். வருகிற தேர்தலில் நாங்களும் நீங்களும் போட்டியிட முடியாதபடி செய்துவிடுவார்கள்.

அய்யர்: இவர்களை இப்படியே விட்டுக்கொண்டுபோனால், கட்டாயம் நாமெல்லாம் மந்திரியாக வரமுடியாது.

முதலியார்: துரும்பைத் தூணாக்கிப் பேசும் சூழ்ச்சிக்காரர்கள் நம் அரசியல் எதிரிகள். ஆட்சியைக் கைப்பற்ற நினைப்பார்கள்.

மந்திரி: நாங்களும் கவனித்துக்கொண்டுதான் வருகின்றோம். சும்மா யிருக்கப் போவதில்லை. அவசியமேற்பட்டால் அடக்கி ஒடுக்குவோம்.

முதலியார்: தீ கொழுந்துவிட்டு எரியும்பொழுதா? அல்லது புகையுமுன்பா? .....

மந்திரி: கத்துக் குட்டிகள்! அடித்தால் அழத் தெரியாது அழுவார்கள். புரட்சி போராட்டமெல்லாம், வெத்து வேட்டுக்கள். தடியை ஏவினால், இருந்த இடத்திலே காண முடியாது. முதலியார்வாள், பயப்பட வேண்டாம். கவனித்துக் கொள்கின்றேன்.

அய்யர்: சுத்த வீரரல்லவா முதலியார்!............இந்தப் பொடியர்களின் மிரட்டலுக்கா அஞ்சுவார்! என்ன சொன்னாலும், இந்த வட்டாரத்து அதிகாரிகள் கவனிப்பதில்லை.........இதைத்தான் நீங்கள் கவனிக்க வேண்டும்.

மந்திரி: கிடக்கிறான்கள், கொசுக்கைகள். எதற்கும் எனக்கு 'போன்' பண்ணுங்கள். கவனித்துக்கொள்கிறேன்.

(மந்திரி போகிறார்.)

## காட்சி 15

[முதலியார் மனையில்]

வீரன்: எஜமான்......உங்களைக் கண்டு பேச வந்திருக்கிறார்கள்.

முதலியார்: யாருடா?

வீரன்: நம்ம பண்ணையிலே வேலை செய்யும்........

முதலியார்: பண்ணையாட்கள்தானே............அவர்களுக்கென்ன வந்தது! வரச்சொல்......

(உழவர்களின் சார்பிலே, தமிழழகனும், சிகப்பியும் வந்து முதலியாரிடம் முறையிடுகின்றனர்.)

தமிழழகன்: வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களை.........

முதலியார்: வெளியில் அனுப்பிவிட்டேன். நாளைக் காலையிலே பொழுது விடியுமுன், குடிசைகளை விட்டுக் காலிசெய்து விட வேண்டுமென்று உத்தரவுமிட்டு விட்டேன்.

சிகப்பி: பாவம்...... அபலைகள்...... அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழழகன்: சென்ற ஆண்டிலே, குத்தகை எடுத்தவர்களுக்கே, இந்த ஆண்டிலும் குத்தகைக்கு விட வேண்டும். இந்தக் கோரிக்கையை கூறிச் செல்லத்தான் வந்தோம்.

முதலியார்: கோருவது யார்?

தமிழழகன்: உழவர்கள்.........

முதலியார்: நீங்கள் எந்தப் பண்ணையிலே வேலை செய்யும் உழவர்கள்...?...

தமிழழகன்: பண்ணையிலே வேலை செய்யவில்லை. ஏர் முனையிலே வியர்வை சிந்தும், ஏராளர்களின் சங்கத்து ஊழியர்கள்.

முதலியார்: புரிந்துகொண்டேன்.........இன்னும் ஏதாவது சொல்லவேண்டுமா...?...

தமிழழகன்: எங்கள் கோரிக்கைக்கு இணங்கி, வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேலை தரவேண்டும்.

முதலியார்: என்னிடம் வேலை செய்ய, விருப்பமில்லாதவர்களுக்கு, நான் வேலை தரவேண்டுமோ? முடியாது. இங்கு குடிப்பது கூழ். எங்கேயோ பாலும் தேனும் ஆறாக ஓடுகின்றது என்று கூப்பாடு போட்டார்களே, அங்கே போகட்டும்.

தமிழழகன்: வயிற்றுக்குப் போதவில்லை, உழைப்புக்கு ஏற்ற கூலி தாருங்கள் என்று கேட்பதிலே குறையுண்டா?

முதலியார்: இதைக் கேட்பதற்கொரு கூட்டம்—எடுத்துச் சொல்வதற்கு நீங்கள்! சிங்கங்கள் உலாவும் காட்டில் சிறுத்தைக்கு சிங்காதனம்! குக்கல்களின் கூக்குரல்!

தமிழழகன்: வயிற்றுவலிக்காரன் வலி தீர, ஏற்ற மருந்தைச் சொன்னோம். மனிதன்தானென்று மதித்து வந்தோம்.

முதலியார்: மருந்தைக் கூறவும், தரவும் மருத்துவர்கள் உண்டு. உங்கள் மனிதத் தன்மையில் எனக்குசந்தேகம்.

தமிழழகன்: வீட்டில் தீப் பிடித்து எரியும்பொழுது, பூப் பந்தாடுகின்றீர்கள்! கொள்ளிக் கட்டையால் தலையைச் சொரிகின்றீர்கள்!

முதலியார்: டே...வீரா, இவர்களைப் பிடித்து வெளியில் தள்ளு. குட்டிநாய்கள் குரைக்கவும் செய்கிறதென்றால் கூவவும் செய்கின்றது.

தமிழழகன்: உன் குருட்டுக் கண்களுக்கு, குட்டி நாய்கள் மட்டுமல்ல, கொத்த வரும் பாம்புகள். சிங்கங்கள் நாங்கள், சிறுத்தைகளல்ல. புலிகள் நாங்கள், பூனைகளல்ல. நீங்கள் சிலர், நாங்கள் பலர். வெள்ளம்போல் திரண்டு விட்டோம். வீணுக்கல்ல. உரிமையைப் பறிக்கும் கயவர்களை உதைத்து வீழ்த்த, சுரண்டிக் கொழுக்கும் சோதாக்களின் சுக வாழ்வில் மண்ணைப் போட, அடக்கி யொடுக்கும், அநியாயக்காரர்களின் ஆதிக்கத்தை அழித்தொழிக்க. கிளம்பிவிட்டோம். அணையிட்டாலும், அயரோம். தூக்குக் கயிற்றைக் காட்டினாலும் அஞ்சோம். எத்தர்களை எதிர்ப்போம்.

(தமிழழகனும் சிகப்பியும் அவ்விடத்தை விட்டு வெளியேறுகின்றனர்.)

முதலியார்: ஊர்ந்து செல்லும் கட்டெறும்புகள். என் கை பட்டால் என்ன ஆவார்கள் தெரியுமா ?....

வீரன்: இந்த விளாம்பட்டி வட்டாரமே அஞ்சி யொடுங்கும்

பொழுது, எவ்வளவு துணிச்சலாக எதிர்த்துப் பேசி விட்டார்கள்...!....

முதலியார்: என்டா...வீரா, அந்தப் பெண் யாருடா?

வீரன்: காலஞ்சென்ற வேலனின் மனைவி, சிகப்பிங்க.

முதலியார்: சிகப்பி! என் பஞ்சணையை அலங்கரிக்கவேண்டியவள். செம்பொன்னைக் காய்ச்சி வடித்த மேனி. அவளது பற்கள் வெண் முத்துக்கள். விழிகளுக்கு உவமையே இல்லை. மலர் மாலைபோல் வந்தாள்; மணத்தை வீசி மகிழச் செய்தாள். என்னுள்ளத்தில் இடமும் பெற்றாள். அவளை விரட்டினால் ஓடுவாளா? த்ச்த்ச்த்ச்......என்ன பாதகம் செய்தேன். கொல்லையிலே இருக்கும் கொடை மல்லிகையைக் கொய்து, கொண்டையிலல்லவா சூடவேண்டும். கசக்கி யெறிந்தால் கருகியல்லவா போய்விடும்! எதோ...நெருங்கிப்பார்ப்போம்.

வீரன்: எஜமான்! உங்க ஆசையிலே மண் விழுந்துவிடும்.

முதலியார்: போடா மட்டி......அதிகப் பிரசங்கி......

வீரன்: உதைத்த காலுக்கு முத்தமிடமாட்டாள்......

முதலியார்: பின் என்னதான் செய்வாள்...?......

வீரன்: எட்டினால், எத்துவாள். நெருங்கினால் உதைப்பாள்.

முதலியார்: இந்தக் காலத்துக் கழுதைக்குக் கூட, அந்தக் குணம் இல்லேடா...எப்படியும் அவளையடைந்துவிட வேண்டும். அதுவரைக்கும் இந்தப் பொல்லாத மனத்திற்குச் சாந்தியே இல்லை.

## காட்சி 16

[ஏராளர் கழகத்தில்]

வல்லாளன்: சலுகை வேண்டி, நம் தலைவர், ஜமீன்தாரின் அரண்மனைக்குச் சென்றுள்ளார். புலியிடம் இரக்கத்தைக் காண முடியாது. சுரண்டிக் கொழுத்து, சுக வாழ்வு வாழும் இனம், தன் சுயநலத்தை விட்டுக்

கொடுக்குமா? இரக்கம் என்னும் சரக்கு முதலாளி சந்தையிலா விற்கும் ...?....

உழவன்: ஆணவமும், அகம்பாவமும் விற்கும். அநீதி, அங்கே தென்றலாக வீசும். இரத்தச் சேற்றிலே மல்லிகை மணக்கும்.

வல்லாளன்: சலுகையும், சமாதானமும் புரட்சியைத் தடுக்கும் கருவிகள். துள்ளி வரும் ஆற்றைத் தடுத்து நிறுத்தும் அணைக்கட்டுகள். இவைகளிலே என்றும் எனக்கு நம்பிக்கை இல்லை.

உழவன்: ஆம்...சுரண்டப்படுபவனைச் சரிக்கட்டும் சப்பைக் கட்டுகள்.

[தமிழழகனும் சிகப்பியும் வருகின்றனர்.]

உழவன்: இதோ அண்ணு வருகின்ருர்கள்,

வல்லாளன்: வாருங்கள்...வாருங்கள். போன காரியம் என்ன ஆயிற்று?...பழந்தானே?......ஏன் மௌனமாயிருக்கின்றீர்கள்? பழம் அழுகிவிட்டதோ!......

சிகப்பி: அழுகியதோடு மட்டுமல்ல அதனுள்ளே ஆபத்தான புழுவும் இருக்கின்றது.

வல்லாளன்: விளங்கவில்லையே.....விளக்கமாகச் சொல்லுங்கள்......

தமிழழகன்: என்னத்தைச் சொல்வது! எள்ளிநகையாடிவிட்டான் எத்தன், நம்மை. உழவர்களின் சார்பிலே கேட்க, நீங்கள் யார் என்று கேட்கின்ருன். கெஞ்சிப் பார்த்தோம், விஷயத்தை விளக்கியும் பார்த்தோம். கோடை வெய்யிலையும், கொட்டும் வியர்வையையும், ஏர் பிடித்த கரத்திலே பட்ட தழும்பையும் காட்டி, எடுத்துக் கூறியும் பார்த்தோம். பலனில்லை. ஒட்டிய மார்பையும், வற்றிய வயிற்றையும் காட்டி, வாட்டம் தீர வழியையும் கூறினேம். சிறுகின்ருன் ஊருக்கு உழைக்கும் உளுத்தர்கள் என்று தூற்றுகின்ருன்.

வல்லாளன்: எதிர்பார்த்தது.... நிகழ்ந்துவிட்டது. இனி சலுகை, சமாதானம் என்பதற்கு பேச்சே இல்லே. ஒரே மூச்சில், உரிமைப் போரைத் துவக்கவேண்டும். உல்லாசிகளின் வாழ்வைக் குலேக்கவேண்டும். உளுத்தர்கள் யார் என்று உலகுக்குக் காட்டுவோம். உரிமைப் போரிலே நம் உயிரைப் பணயம் வைப்போம். உதிர்ந்த குருதியிலே மிதந்தபோதும், சளைக்காது இந்த நாட்டுப் பாட்டாளிகளின் உரிமையை நிலே நாட்டவேண்டும். கன்னல் சக்கை போன்று, மனிதன் பிணமாய் வீழ்ந்தாலும் மலேக்காத நல்ல மறவர்களேச் சேர்த்து படைவரிசையமைப்போம். மண்ணும் விண்ணும் அதிரப் போரிடுவோம். சுரண்டல்காரர்களேச் சூரையாடுவோம், துரோகிகளேத் தொலேப்போம்......

தமிழழகன்: பொறுப்போம்...காலமென்னும் நல்ல கோட்டையை எதிர்பார்த்து நிற்போம்.

வல்லாளன்: இனி பொறுமைக்கு இடமில்லே. நாம் பொறுத்துவிடலாம். ஆனல், மக்கள் மனம், குமுறும் எரிமலேகள்! குழம்பைக் கக்கினல் தடுக்கவே முடியாது.

தமிழழகன்: நம் நாட்டுப் பெருமக்கள் கூட்டத்தைக் கூட்டி யோசிக்கவேண்டும். அடுத்த வாரத்தில், நம் இயக்கத்தின் செயற்குழுக் கூட்டம். அதில் போராட்டத்தைப் பற்றி தீர்மானிப்போம். அதுவரை அமைதியோடு இருங்கள். (எல்லோரும் கலேகின்ருர்கள்.)

## காட்சி 17.

(ஜமீன் மாளிகையில்)

அய்யர்: முதலியார்வாள்,......எது .....ஆழ்ந்த சிந்தனே! எந்தக் கோட்டையைத் தாக்கத் திட்டமிட்டிருக்கின்றீர்கள்?

முதலியார்: மனக் கோட்டையை தாக்கிய, மானேத்

தூரத்த, கொஞ்சிப் பேசி மரக் கிளையிலே தவழும் கிளியைப் பிடித்து என் கூண்டிலே அடைக்க.......

அய்யர்: ஓகோகோ வண்ணக் கிளி, உங்கள் உள்ளத்தை வாட்டுகின்றதோ !...

முதலியார்: வேல் விழியை வீசி, என்னை வீழ்த்தியே விட்டது.

அய்யர்: அந்த அழகுக் கிளியின் திருநாமம்...?...

முதலியார்: சிகப்பி !

அய்யர்: நல்ல சொகுசுக்காரிதான் ...வேலனின் கூண்டிலே கொஞ்சிய கிளியல்லவா அவள் ..!...

முதலியார்: வேலனைத்தான் ஒழித்துக் கட்டிவிட்டோமே. இப்பொழுது அவள் வேலியில்லாத் தோட்டத்து மலர். விரிந்த வானிலே சிறகடித்துத் திரியும் சுயேச்சைக் கிளி ......

அய்யர்: நாம் வைத்த கண்ணியிலே சிக்கவேண்டுமல்லவா? அதுதான் கடினம்.

முதலியார்: கண்ணிக்கு சிக்காவிட்டால் .. கவ்வான் கல்லால், ஓரே ஒரு அடி மயக்கம் தெளிந்து பார்த்தால் என் மஞ்சத்திலே உருளவேண்டும்

அய்யர்: நல்ல யோசனை....அவள் மொக்கு அல்லவே...!....

முதலியார்: கருகிய மலர்தான். ஆனாலும் என் நெஞ்சைக் கவர்ந்த கள்ளி அவள். களிப்பையூட்டிய கனி அவள்.

அய்யர்: அவளது காதல் கொழுநன் வேலனை, நாம் கொலை செய்துவிட்டதால், கோபக் கனலிலே கொப்பளித்திருப்பவள்...ஒப்புவாளா ?... மறுப்பாள்.

முதலியார்: ஒப்புவாளோ, மறுப்பாளோ ! அதைப் பற்றிக் கவலையே இல்லை.

அய்யர்: கல்லாலடித்து கனிய வைத்த பழத்திலே சுவை இருக்காது.

முதலியார்: நாறும் சேற்றிலே அழகு தாமரை இல்லையா? வண்டு மொய்த்த மலரிலே மணமில்லையா?...தரையை இகழ்வோரைத் தரணி தாங்குவதில்லையா?

அய்யர்: அணுக்குண்டு வேகத்திலே உங்கள் ஆசை பாய்ந்து விட்டது. ஆசை தவறினால்......

முதலியார்: அவளை அடையாவிட்டால் என் உடல் சரிந்து விழும்; அந்த அதிர்ச்சியிலே உயிர் பிரிந்துவிடும்

அய்யர்: கலங்கவேண்டாம். முயன்று பார்ப்போம்.

## காட்சி 18

[தனிமையாக நடந்து வருகின்றாள் சிகப்பி, மரங்களடர்ந்த பாதையிலே. அவ்வழியாக, சிகப்பி வருவது தெரிந்து, முதலியார் ஒரு மரத்தடியில் ஒளிந்து கொள்கிறார்.]

முதலியார்:- என் கண்ணைக் கவர்ந்த கட்டழகியாள், இந்தப் பக்கந்தான் வருவாள். வரட்டும் பார்த்துக் கொள்வோம். பூனையைப் போல் தொடர்ந்து புலவனைப் போல என் ஆசையை, அழகுபடக் கூறுவேன். வேல் விழியால், என் வேட்கையைத் தணிக்க, ஒப்பி விட்டால்...அணைத்தே விடுவேன். அரண்மனைக்கு அழைத்துச் சென்று, மல்லிகையைப் பறித்து, அவள் கொண்டையிலே சூட்டிக் கண்டு களிப்பேன். அவள் இசையத்தான் வேண்டும். இன்பத்தைச் சுவைக்க மறுத்தா விடுவாள்?.... அதோ வருகின்றாள்... ஆம் அவள் தான். என் ஆசையைத் தூண்டிய, அழகு மணியாள்...

சிகப்பி: (தனக்குள்) ஆகா... என்ன இன்பம்... இயற்கை தரும் இன்பம். தென்னையிலே சிரித்திடும் கிள்ளை, கொய்யாக்கனியோடு போட்டியிடும் குரங்குக் கூட்டம், மாங்கனியைத் தாவிடும் அணில், மலர்க் குளத்திலே ஆடிடும் வண்டின் ரீக்காரம், ஓடி வரும் நீரில் துள்ளி விளையாடும் சிறுமீன் கூட்டம், இவைகளுக்கிருக்கும் இன்பங்கூட, மனிதனது வாழ்க்கையில் இல்லையே...

முதலியார்: சிகப்பி, திரும்பிப் பார்!...

சிகப்பி: (திரும்பிப் பார்த்து) ஏன் அழைத்தீர்கள்?...

முதலியார்: உன்னிடம் பேச... ....

சிகப்பி: என்னிடம் பேச வேண்டிய அவசியம்?

முதலியார்: தளர்ந்த உன் வாழ்வைத் தளிர்க்கச் செய்ய ..

சிகப்பி: என் மீது, தங்களுக்குள்ள பச்சாதாபத்திற்கு நன்றி. தயவு செய்து தள்ளிப் போங்கள்.

முதலியார்: பசப்பு வார்த்தை பேசி, என்னைப் பதறச் செய்யாதே, என் அன்பே! தத்தளிக்கும் கலத்திற்கு, கலங்கரை விளக்குப் போன்று...

சிகப்பி: என் கணவரைக் கொன்ற, கொலைகாரன், நீ. கொன்றது மன்றி, பெண்டாளவும் வருகின்றாய்...

முதலியார்: இப்பாவியை மன்னித்துவிடு, சிகப்பி! மனம் இரங்கி என்னைப் பார். வைரக்கல் அட்டிகை, உன் கழுத்தில் மாலையாகப் போடுகின்றேன்.

சிகப்பி: மன்னிப்பு! பணத்திமிர் பிடித்து, மமதையான வனுக்கு மன்னிப்பு! ஊராரின் உழைப்பை உறிஞ்சிக் கொழுத்த உலுத்தனே, விலகிச் செல். பாம்பிற்கு பச்சாதாபப்படும், பைத்தியக்காரியல்ல நான்.

[சிகப்பி, ஓடி வந்துவிடுகின்றாள். ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றார், முதலியார்]

## காட்சி 19

[முதலியார் மனையில்]

முதலியார்: (தனிமையாக) இன்று அவள் தப்பிவிட்டாள். அனாதைச் சிறுக்கிக்கு எவ்வளவு ஆணவம்! இனி என்றும் அவள் தப்ப முடியாது. என்றாவது ஒரு நாள் அவள், என் வலையில் சிக்கத்தான் வேண்டும். விளாம்

பட்டி, வீரப்ப முதலியாரின் வீரத்தை, இதிலே தான், பார்க்க வேண்டும்.

அய்யர்:(வந்துகொண்டே)தோல்வியே அறியாத சிங்கத்தை, எள்ளி நகையாடிவிட்டாளோ?

முதலியார்: என் சொத்து, சுகமெல்லாம் இழந்தாவது, அவளது செவ்விதழைச் சுவைக்க வேண்டும்.

அய்யர்: மறுத்தால்....விட்டு விடுங்கள்.

முதலியார்: மறுக்கிறதாவது! விட்டு விடுவதாவது! முன் வைத்த காலே, பின் வைக்கப் போவதில்லை.

அய்யர்: அடிக்க அடிக்க எழும்பும் பந்தவள்!

முதலியார்: அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்; எறும்பு ஊரஊரக் கல்லும் தேயும்.

அய்யர்: அவள் பெண், பேதை. நாள் முழுவதும், அடித்தாலும் கேட்பாரில்லை. காசை வீசியெறிந்தால், கட்டுப்பட்டு விடுவாள். மறுபடியும் அவளை நேசிப்பதாக, கடிதம் தீட்டுங்கள்

முதலியார்: வேதாளம் முருங்கை மரம் ஏறினல்......?

அய்யர்: அண்ணன், பலாத்காரம் இருக்கவேயிருக்கு...... ஆதிக்கக்காரர்களின் கடைசி ஆயுதம், அவளுக்கு ஏற்ற மருந்துங்கூட ......

முதலியார்: அப்படியே செய்வோம்.

அய்யர்: கடிதம் எப்படி இருக்கவேண்டும் தெரியுமா? ...... அவளைக் கொஞ்சுவதோடு மட்டுமல்லாமல், பயமுறுத்துவதாகவும் இருக்கவேண்டும்.

முதலியார்: நீங்களே சொல்லுங்கள். நான் எழுதுகின்றேன்.

[அய்யர் சொல்ல முதலியார் எழுதுகிருர்]

"என் அன்பே!.. சிகப்பி, உன் அன்பிலே மூழ்கித் திகைத்து மருளும் மான் நான். உன் மலரிலுள்ள தேனைப் பருகத் துடிக்கும் வண்டு நான். செக்கர் நிற

மேனியைக் காட்டி, என்னகமெல்லாம், அம்பைப் பாய்ச்சி விட்டாய். என்னை வாட்டுகின்றாய். வாட்டம் தீர, மகிழச் செய்ய வா, என்று அழைக்கிறேன். பள்ளமுள்ள இடத்தில்தான், தண்ணீர் தேங்கும் பணம் உள்ள இடத்தில் தேங்க வேண்டியவள் பாவை. நான் கெஞ்சிக் கெஞ்சிப் பேசுவேன்...நீ, கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவாய். கோவை இதழ் விரித்துச் சிரிப்பாய், அப்படியே அணைத்து விடுவேன். என் பஞ்சணையிலே நீ பந்து, நான் உருட்டுபவன். நீ மலர், நான் வண்டு. இது என் கனவு. கனவு நினைவாகுமா?...... என் கண்ணே...சிகப்பி, நினைவானால்...சொல்லவா வேண்டும்! என் அரண்மனை ராணியல்லவா நீ? மறுக்காதே...மறுத்தால்......நான் முரடனாகி விடுவேன். பலாத்காரம் செய்து உனது பவளச் செவ்விதழிலே முத்தமிடுவேன். என்னைப் பற்றி, என் திறமையைப் பற்றி, என், வலிமையைப்பற்றியெல்லாம், உனக்கு நன்றாகத் தெரியும். கடிதம் கண்டவுடன், நாளை நள்ளிரவில், என் அரண்மனைப் பூங்காவிற்கு வா..."

இங்ஙனம்
வீரப்ப முதலியார்
ஜமீன்தார், விளாம்பட்டி.

முதலியார்: (கடிதத்தை ஒருமுறை படித்துவிட்டு) கடிதம் அழகாக அமைந்திருக்கின்றது. அர்த்த சாஸ்திரத்தோடு ஐந்தாம் வேதமும் கற்றிருக்கிறீர்! அடுத்தபடி?

அய்யர்: ஆலோசிப்போம்......முதலில் கடிதம் போய்ச் சேரட்டும்.

முதலியார்: டே... வீரா...

வீரன்: (உடனே ஓடிவந்து) என்னாங்க எஜமான்?

முதலியார்: இந்தக் கடிதத்தை சாலை முக்கிலே உள்ள, தபால் பெட்டியிலே உள்ள ஓட்டையிலே போடடா?

வீரன்: ஆகட்டுங்க

முதலியார்: எதிலேடா போடுவே?

வீரன்: சாலையிலே இருக்கிற—மூக்கிலே இருக்கிற, தபால் பெட்டியிலே உள்ள ஓட்டையிலே போடுவேன்.......

முதலியார்: சுருக்கமா சொல்லுடா கழுதே......

வீரன்: தபால் பெட்டியிலே போடுவேன்.

முதலியார்: போய்த் தொலை.

## காட்சி 20

[தபால்காரன் சிகப்பியிடம் கடிதத்தைக் கொடுக்கிறான் ]

சிகப்பி: (மகிழ்ச்சியுடன்) இரண்டு நாட்களாக எதிர்பார்த் திருந்த கடிதம் இன்றுதான் வந்ததா!...(கடிதத்தை உடைத்துக்கொண்டே) என்னென்னமோ .....நினைத் தேன். என்னை மறந்துவிட்டாரோ என்றுகூட எண்ணி னேன். நீ எங்குள்ளாயோ, அங்கெல்லாம் நானுள்ளேன் என்று, என் தாடையைத் தடவிக்கொண்டே கூறி னாரே, அவையெல்லாம் ஏமாற்றுப் பேச்சு என்றுகூட நினைத்தேன். என்னை ஏமாற்றுவதற்கு அவர் என்ன அர்ச்சுனனா?...இதோ!...என்னுடன் பேசப் போகி றார். (கடிதத்தைப் படிக்கின்றாள்.) "கொஞ்ச கெஞ்சுகின்றேன். மறுத்தால் பலாத்காரம்." — அட பாவி...!.. நெஞ்சம் துணிந்துவிட்டாய். பாம்போடு விளையாடுகின்றாய். என் கணவனைக் கொன்றாய், சகித் திருந்தேன். ஆதரவற்று அல்லற்பட்டேன். அம்பு பாய்ந்த புலி நான். வாழ்க்கைப் போரில், புண்பட்ட நெஞ்சத்தாள் நான். வாட்டமே உருவாய் வாழ்ந்த நான், உன் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் அஞ் சேன். கட்டியணைக்கும் கரத்தில், கட்டாரியை ஏந்து வேன். தட்டிக் கேட்க ஆளில்லாத காடாய், தலைவன்

இல்லாத வீடாய், தளபதி இல்லாத படையாய் விட்டது இந்த நாடு. நீதியற்ற நீசர்களும், மானமற்ற நாய்களும், உலாவும் காடாகிவிட்டது இந்த நாடு. இந்த நாட்டுப் பாவையர் இனம், மணம் வீசும் மலர் மட்டுமல்ல; கொல்லும் நாகம் குடிகொண்டிருக்கும் நச்சுப் பொய்கை. அழகால் கவர்ந்து, கண்டாரைக் கொல்லும் நாகப் பாம்பு. ஏ வீரப்பா...!...ஏழைகளை ஏமாற்றி வாழ்ந்தாய், என் அத்தானைக் கொன்ருய். என் வாழ்வைக் கெடுத்தாய். நான் உன் வாழ்வைக் குலைப்பேன். கொஞ்சவரும் உன் இதழ், உன்னுடலிலிருந்து கொட்டும் செங் குருதியைக் கொஞ்சட்டும் கட்டியணைக்க வரும் உன் கரங்கள், மரணத்தைத் தழுவட்டும்...... (சிகப்பி கடிதத்தைப் படித்ததும், ஆவேசமாகப் பேசியதையும் கொத்த வரும் பாம்பையும் கொல்ல சூள் உரைத்ததையும், மறைவிலிருந்து பார்த்துக்கொண்டு செல்கிறது ஒரு உருவம்.)

## காட்சி 21

[முதலியார் தனிமையாக ஏதோ ஒன்றைப் படித்துக்கொண்டிருக்கிருர். அச் சமயம் பரபரப்பாக அய்யர் ஓடி வருகிருர்]

அய்யர்: உங்களைச் சந்தித்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.......

முதலியார்: என்ன...!...அவ்வளவு அவசரம்?

அய்யர்: ஆம். உயிர் போகுமளவுக்கு அவசரம்......

முதலியார்: உயிர் போகுமா ?...ஒன்றும் புரியவில்லையே... விளக்கமாகச் சொல்லும்.

அய்யர்: சிகப்பிக்கு, நாம் எழுதிய கடிதம்......

முதலியார்: கண்டு மகிழ்ந்திருப்பாள். தென்றலைக் கண்ட கார் முகிலைப்போல ஆடிக்களித்திருப்பாள்......

அய்யர்: அல்ல, அல்ல .. கோபித்தாள், கொக்கரித்தாள்... கொஞ்ச வரும் வஞ்சகனைக் கொல்ல சூளுரைத்து விட்டாள்......

முதலியார்: பூனையாக இருந்து புலியாகிவிட்டாளா? என் ஆசையில் மண்ணைப் போட்டுவிட்டாள். அவள் என் மாடத்துப்புறுவாகவேண்டும், அல்லது மடியவேண்டும்.

அய்யர்: விபரீதங்கள் விளைந்துவிடும். அவள் மேல் உள்ள எண்ணத்தை விட்டுவிடுங்கள்.

முதலியார்: பைத்தியக்காரத்தனம்! தரைக்கு அடியிலே இருக்கும் தங்கத்தை எடுக்க, மண் சரிந்து மாண்டு விடுவோமே என்று நினைத்தால்......பொன் எங்கே? பொழில் தரும் பூண் எங்கே?

அய்யர்: ஆம் எட்டிப் பார்க்க முடியாத, எவரெஸ்டைப் பார்க்க, ஏறி ஏறித்தான் பார்க்கவேண்டும். கொட்டும் பனியிலிருந்து தப்ப, நல்ல கம்பளிப் போர்வையைப் போர்த்திக்கொள்ள வேண்டும்.

முதலியார்: கொல்ல வரும் பாம்பை, மகுடி வாசித்து மகிழச் செய்ய வேண்டும் மருண்டபொழுது, பிடித்துக் கூண்டிலே அடைத்துவிட வேண்டும். நச்சுப்பல்லைக் காட்டினால், கொன்று தொலைத்துவிட வேண்டும்.

(முதலியாரும், அய்யரும் காதுக்குள் ரகசியமாகப் பேசிக்கொள்ளுகின்றனர்.)

முதலியார்: நல்ல திட்டம். திட்டம் வெற்றி பெற்று விட்டால்......?

அய்யர்: வெற்றி நிச்சயம் ஒரே கல்லில் இரண்டு கனிகள். நமது சதி நாடகத்தில் நடிப்பவன், திறமை மிக்கவனாகவும், ஏற்கனவே பழக்கப்பட்டவனாகவும், நம் நம்பிக்கையுள்ளவனாகவும் இருக்க வேண்டும்.

முதலியார்: எனக்குப் பிடித்தமானவன் மொக்கயன் தான். சதிக் கூட்டத்திலே சொக்கட்டானாக இருந்த

வன், நல்ல முரடன். இனிமையாகப் பேசி, காரியத்தை முடிப்பான். இரண்டு வெள்ளிக் காசுகளை வீசினால், பின்னால் நாய் போல் வருவான் அதுவும் என் காரியத்தில், கண்ணும் கருத்துமாய் இருப்பான்.

அய்யர்: முரட்டு வேலைக்கு முட்டாள்கள்தான் தேவை. (அய்யர் போகிறார்)

## காட்சி 22

[மொக்கயன் தோட்டத்தில்]

அய்யர்: எம்ப்பா மொக்கயா, சுகந்தானே...?

மொக்கயன்: அய்யா இருக்கிற வரையில், இந்த மொக்கயனுக்கு என்னாங்க குறச்சல்... ஏஞ் சாமி... ஏது இவ்வளவு தூரம்?

அய்யர்: எல்லாம் உன்னைத் தேடித்தானப்பா.

மொக்கயன்: ஊரிலே புதுசா ஏதாவது ரகளை...

அய்யர்: இல்லப்பா இல்லை. பசுங்கிளியைப்பிடித்துக்கொண்டு வந்து, நம் ஐயா வீட்டுக் கூண்டிலே அடைக்க வேண்டும். அவ்வளவுதான்.

மொக்கயன்: செஞ்சா தீந்திச்சி...

அய்யர்: அப்படிச் சொல். அதற்குத் தான் உன்னைத் தேடி வந்தேன். நமது வேலன் மனைவி சிகப்பி இல்லே...

மொக்கயன்: இல்லேயா?... இருக்கா.

அய்யர்: அவள் மேல் நம் அய்யா கண் பட்டு விட்டது.

மொக்கயன்: போய் வாருங்கள்...வெற்றிச் செய்தியோடு சந்திக்கின்றேன். (அய்யர் பிரிந்து செல்கிறார்)

## காட்சி 23

[நடுராத்திரி நேரத்தில் ஜமீன்தாரின் வேடத்தில் மொக்கயன் சிகப்பியின் குடிசையின் உள்ளே நுழைந்து விடுகின்றான். அச்சமயம் சிகப்பி அயர்ந்து தூங்குகின்றாள்]

மொக்கயன்: பெண்கள் படுக்கையிலே, மலர் மணக்குமென்று சொல்லுவாங்க. ஆனல் இவளது படுக்கையில் ஒன்றும் மணக்கக் காணோம்! ஓகோ...பணக்காரர்கள் வீட்டுப் பைங்கிளிகளின் படுக்கையிலல்லவா, மல்லிகை மணக்கும், சிகப்பி...சிகப்பி...ஏகுட்டி...எங்கே என்னை விழித்துப் பாரு. மாட்டாயா?... எழுந்திரடி என்னாசைக் கோகிலமே!... (வீரப்ப முதலியாரின் வேடத்திலிருக்கும் மொக்கயன் சிகப்பியின் உடலைத் தொட்டு எழுப்புகின்றான்) உன்மேல் எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா?

சிகப்பி: (விழித்துக் கொண்டு) நீ யார்?... ஏன் இங்கு வந்தாய்?...

மொக்கயன்: என்ன பிள்ளே...அறியாதவள் போல பேசுகின்றாய்...நான் விளாம்பட்டி ஜமீன்தார் வீரப்ப முதலியாரல்லவா?...

சிகப்பி: ஜமீன்தார்......கொலைகாரன்.

மொக்கயன்: மறந்து விடு சிகப்பி...என் பஞ்சணை, உன் வருகைக்காக வாடுகின்றது ...

சிகப்பி: இந்தக் கொடுமையைச் சகிக்க மாட்டேன்.

மொக்கயன்: மனோகரமான மாளிகை கட்டி, அதைச்சுற்றிலும் பூங்கா அமைத்து, அதிலே உன்னை உலாவச் செய்கின்றேன். காவேரியின் கரையிலுள்ள, என் நிலம் முழுவதும் உன் பெயருக்கே எழுதி விடுகின்றேன். சிகப்பி, என் இன்ப தாகத்தை தணிக்க இணங்கு.

சிகப்பி: காமக் கிறுக்கால் உளற வேண்டாம். மரியாதையாக வெளியே செல்.

மொக்கயன்: நீரைப் பிரிந்த மீனாவேன். வலையில் வீழ்ந்த மான் ஆவேன். நீ இல்லாத இடத்திலே எனக்கு என்ன வேலை? சிகப்பி, வா...என் அருகில் வா... வர மாட்டாயா...

சிகப்பி: எரியிலே விளையாடும் விட்டிலின் உயிர் நெடுநாள் நீடிக்காது.

மொக்கயன்: எரிமலையா நீ? இல்லவே இல்லை. பாலைவனப் பசுஞ் சோலையல்லவா நீ! சிகப்பி...அருகே வா...... வர மாட்டாயா! கெஞ்சக் கெஞ்ச மிஞ்சுகின்றாய்! ஆண்டிக்கு அரச பீடம் தந்தால் குந்தியிருக்க குண்டி நோகுதென்று கூறுகிறாய்! இனிமேல் என்னிடமிருந்து தப்ப முடியாது நீ!

[ஜமீன்தாரின் வேடத்தில் நடிக்கும் மொக்கயன், வெறியோடு அருகில் நெருங்குகிறான். தான் மறைத்து வைத்திருந்த கட்டாரியை எடுத்துக் குத்தி விடுகின்றாள் சிகப்பி. கீழே விழுகின்றான் மொக்கயன்]

மொக்கயன்: ஆ...அய்யோ குத்திவிட்டாள் வஞ்சகக்காரி. வதைத்து விட்டாள்! என் வாழ்வு முடிந்துவிட்டது. [மொக்கயன் உயிர் பிரிகிறது. கூச்சலைக் கேட்டு கிராம வாசிகள் கூடுகின்றனர். போலீஸ் அதிகாரிகள் வருகின்றார்கள்]

சப்இன்ஸ்பெக்டர்: உன் பெயர்?

சிகப்பி: சிகப்பி.

சப்இன்ஸ்பெக்டர்: மூலை வீட்டு மொக்கயனைக் கொன்றாய்...காரணம்?

சிகப்பி: அல்ல ஜமீன்தார், வீரப்ப முதலியாரைக் கொன்றேன்.

ச. இ: (ஒரு கிராம வாசியைப் பார்த்து) இது யாருடாப்பா துரை மகன்! சுதந்திரம் வந்திருச்சோ...தலைப்பாவை எடுடா கழுதை... இவன் பெயர் என்னடா...?

கிராமவாசி: (தலைப்பாவைஎடுத்துக் கொண்டு) யார் பெயருங்க எஜமான்...

இன்ஸ்பெக்டர்: செவிட்டுப்பயலே...செத்தவன் பெயருடா.

கிராமவாசி: மொக்கயனுங்க....

சிகப்பி: மொக்கயனு...இல்லே இல்லே. நன்ருகப் பாருங்கள்.

இன்ஸ்பெக்டர்: உனக்கு கண்ணில்லா விட்டால், அவர்கள் கண் பிடரியிலா, இருக்கின்றது?

சிகப்பி: வீரப்ப முதலியென்று தான் கொன்றேன்...

இன்ஸ்பெக்டர்: பித்தலாட்டம் செய்யாதே...

சிகப்பி: உண்மை, என்னை நம்புங்கள்.

இன்ஸ்பெக்டர்: வீரப்ப முதலி...உன் விரோதியா? ..

சிகப்பி: ஆம். என் கணவனைக் கொன்றவன் வீரப்ப முதலி. என் மானத்தைப் போக்க வந்தான் வீரப்ப முதலி. நான் அவனைக் கொன்றேன். பாய வரும் புலியைக் கொல்வது குற்றமா?

இன்ஸ்பெக்டர்: அதையெல்லாம் கோர்ட்டிலே, சொல்லி வாதாடு. டே...101, இவளைக் கைது செய்.

## காட்சி 24

[பொதுக் கூட்டத்தில்]

வல்லாளன்: தோழர்களே! புதுமை காணத் துடித்து நிற்கும் நேசர்களே! உருக்குலைந்து உருமாறியதுபோதும். உழைப்போம்—ஆனல் உறிஞ்சவிட மாட்டோம் இனியும்! சுக வாழ்வு சமைப்போம்—ஆனல் எவரையும் சுரண்டவிட அனுமதியோம். உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழைப்பவனுக்கே உரிமை யாவும் பந்தம் என்று முரசறைவோம். "கொலை வாளினை எடடா, கொடியோர் செயல் அறவே" என்று உயிர் பிரியும் வரை உரைப்போம். தனி மனிதரின் ஆதிக்கத்தை ஒழிக்க—அறப்போர் தொடுக்கத் தயாராகுங்கள்! வைதீக வேள்வியிலே, மதம் என்ற போர்வையிலே, வடவர் மிலேச்சத்தனத்திலே, பனியா — பார்ப்பனீயப் பேயாட்டத்திலே அராஜகம் இனியும் நீடிப்பது கூடாது-நீடிக்காது—நீடிக்கவும் விடமாட்டோம்.

கூட்டத்தினர்: முதலாளித்துவம் ஒழிக! பஞ்சத்தைப் பரப்பும் பண ஆதிக்கம் அழிக! பஜகோவிந்தப் பண்டார ஆட்சி ஒழிக! மக்கள் துயரைத் துடைக்கத் தெரியாத தான்தோன்றி அரசாங்கம் தரைமட்டமாகுக!

[போலீஸ் லாரிகள் வந்து சேருகின்றன. துப்பாக்கிச் சப்தங்கள் வானிலே எதிரொலிக்கின்றன. வல்லாளன், மற்றும் பலரும் கைதாக்கப்படுகின்றனர்.]

## காட்சி 25

[சாணக்கியர் வீட்டில்]

அய்யர்: உனக்கு நல்ல அழகும், எழில்மிக்க உருவும், பார்ப்போரைப் பரவசப்படுத்தும் ஆடலும்—பாடலும் அமைந்திருந்தும் நம் வாழ்வு மாடித் தட்டிலே இல்லை. நம் பாட்டன் சாணக்கியன், மௌரிய பரம்பரையையே ஆட்டிப் படைத்தான். அவன் கையில் ஆடும் பம்பரமாக இருந்தார்கள் அரசர்கள். அவன் பரம்பரையால் நாம், நம் நாளில் எண்ணிப் பார்த்தால் என் நெஞ்சம் அடைக்கின்றதே, அமுதா !

அமுதம்: நீங்கள்தான் குட்டி மன்னர் வீரப்ப முதலியாரின் அமைச்சராகிவிட்டீர்களே, அப்பா !

அய்யர்: என்ன இருந்தாலும், அவன் நம் இனத்தின் வைரிதானே அமுதா?......காட்டில் வாழும் புலியை கூண்டிலே அடைத்து, நீரைப் பருகச்செய்தாலும் புலாலையும், காட்டையும் புலி மறந்தா விடும்? கொத்தும் பாம்பைக் கூண்டிலே அடைத்து பால் வார்த்தாலும் பாம்பிற்கு விஷமில்லாமலா போய்விடும்....?

அமுதம்: அவர்தான் பணத்தை அள்ளி அள்ளி வீசுகின்றாரே, அப்பா....!....நீங்கள் சொல்லும் வார்த்தை அவருக்கு வேத வாக்கல்லவா ?

அய்யர்: கால நிலை மாறிவிட்டது அமுதா!...... சூழ்ச்சியும் சூதும் இனி நிலைத்து நிற்காது. சுயநலக்காரர்கள் இனி சுரண்டி வாழமுடியாது. முதலியாரின் பணமும் அப்பாவின் அருளும் இனி நாட்டில் செல்லவே செல்லாது. இளித்தவாயர்கள் விழித்துவிட்டனர். ஆட்சியை அழிக்கும் அளவுக்கு உரிமைப் போரைத் துவங்கிவிட்டனர். என்றாவது ஒரு நாள் ஜமீன்தாரின் பொருளும், புகழும் சூறையாடப்படும்.

அமுதம்: அய்யோ...!... நம் பிழைப்பு...?...

அய்யர்: அதைத்தான் சொல்ல வந்தேன். கிளையை நம்பி அதன் நிழலிலே குந்தியிருப்பவர்களல்ல நாம். ஆற்றை நம்பி, அதன் கரையிலே நிற்கும் அரச மரங்களல்ல நாம். புத்தியுண்டு பிழைப்பதற்கு.

அமுதம்: நாம் எங்கேயாவது...!...

அய்யர்: ஆம். செல்லத்தான் வேண்டும். அதற்கு முன், அகப்பட்டதைச் சுருட்டவேண்டும்......

அமுதம்: குடியிருக்ககுச்சில் தந்தவன் வீட்டிலே கொள்ளையிடுவதா? ...

அய்யர்: அதுதான் நம் குலத் தொழில். காரியக்காரனின் கைக்கோல்.

அமுதம்: விஷயம் வெளிப்பட்டால் விபரீதம் விளைந்து விடும் அப்பா... ?....

அய்யர்: விஷயமாவது, வெளிப்படுவதாவது! நம் திருட்டுக் குத் திரை, பட்டால் நெய்யப்பட்ட பவளத் திரை. திருடுவது நாம். ஆனால் திருடர்களென்று உலகம் யாரைத் தூற்றும் தெரியுமா? ஊருக்குழைக்கும் தமிழழகனை, புரட்சிக்காரர்களின் தலைவனை! திருடிய நாம் தில்லேலைப் பாடுவோம் திருடாத தமிழழகன், சிறைச் சாலையில் கண்ணீரைச் சிந்தி, காம்போதி பாடுவான். பணத்திற்குப் பணம், நம் இன எதிரிகளில் ஒருவனும் வஞ்சிக்கப்படுகிறான். ஒரு கல்லில் இரு பழங்கள்!

அமுதம்: நல்ல திட்டந்தான்...வெற்றி பெற வேண்டுமே!

அய்யர்: என் அறிவும், உன்னுடைய அழகும் முதலியாரின் நம்பிக்கையும் இருக்கிறவரையில் வெற்றி நிச்சயம்.

## காட்சி 26

[முதலியார் மகிழ்ச்சியாக பஞ்சணையில் அமர்ந் திருக்கின்றார். சாணக்கியரும், அமுதமும் வரு கின்றனர்.]

அய்யர்: ஏது முதலியார்வாள்! ரொம்ப குஷியாய் இருக் கேள். அகப்பை ஆழமாகப் பதிந்துவிட்டதோ?

முதலியார்: சீறும் சிறுத்தையை, மடக்கிப் பிடித்த வீர னின் வெற்றிக் களிப்புக்கு என்ன பஞ்சம்...?

அய்யர்: ஓகோ......சிறுத்தையை மடக்கிய சிங்கமாகிவிட் டீர்களோ...?

அமுதம்: எனக்குக்கூட கொஞ்சம் பயமாகத்தானிருக் கின்றது!

முதலியார்: உரிமைப் போர் துவக்குகிற, குட்டி நரிகளின் காட்டுக் கூச்சலெல்லாம் ஒழிந்துவிட்டது; கல் பட்ட காக்கை கூட்டம்போல மறைந்துவிட்டது.

அய்யர்: தடியால் அடித்தது, தடவிக்கொடுத்தது போலா கும். சுட்டுப் பொசுக்கியிருக்கவேண்டும் அவர்களை! சிகப்பி, நாளை அந்த சிங்காரத் தூக்கிலே தொங்கு வாள்!

அமுதம்: உங்கள் கண்ணுக்கு அவர்கள் கதிர்க் கட்டுகள்...

முதலியார்: என்னோடு கொஞ்சத் தெரியாதவள் தூக்குக் கயிற்றை முத்தமிடுகிறாள்! பைத்தியக்காரி!...அமுதா! உன் அழகுப் பிழம்பிலே பட்டுப் பறக்கும் தூசி அவள்!

அமுதம்: விளாம்பட்டி வீரப்பனார் என்றபட்டம் பொருத்த மில்லாமலா போய்விடும்!

அய்யர்: தொலைந்தது சனியன்கள்! அதைப்பற்றி இனி அடிக்கடி பேசவேண்டாம்; மறந்துவிடுங்கள். இன்று அம்மையை அப்பன் அணைத்த நாள். அம்மன் கோவில் வரை போய் வரவேண்டும். முதலியார்வாள்...

முதலியார்: அமுதத்தையுமா அழைத்துச்செல்கின்றீர்கள்?

அய்யர்: வேண்டுமானால் இங்கேயே இருக்கட்டும். (அமுதாவை விட்டுவிட்டு அய்யர் போய்விடுகின்றார்.)

முதலியார்: உன் அப்பா நம் இருவருக்குமிடையே இரும்புத் திரை போட்டிருந்தார். ஒருவாறு அகன்றுவிட்டார். இனி நம் சல்லாபத்திற்கு இடையூறே இல்லை. வா, நம் சயன அறைக்கு செல்வோம். (இருவரும் செல்கிறார்கள்.)

## காட்சி 27

[ஜமீன்தாரின் அந்தரங்கப் பண அறையிலே]

அய்யர்: (தனிமையில்) முத்தும் மணியும் நிறைந்த வைரக் குவியல்! நல்ல வேட்டை! என் குடும்பம் உழையாது வழிவழியாய் வாழலாம். ஒரு வைரக்கல் வரிசையை விற்றால் இந்த ஊரையே விலைக்கு வாங்கிவிடலாம். இனிமேல் ஆண்டியல்ல நான். அரசபீடம் என்னை அண்டிவிட்டது. (விலையுயர்ந்த பொருட்களையும் பணத்தையும் மூட்டை கட்டிக்கொண்டு கள்ளத்தனமாக ஓடுகிறார்.)

## காட்சி 28

[மறுநாட் காலை பணப் பெட்டியைத் திறந்து பார்க்க, அங்கு பொருள்களைக் காணாமல் நிற்கின்றார் ஜமீன்தார்.]

முதலியார்: பொன்னையும், பொருளையும் இழந்தேன். ஆயிரமாயிரம் நோட்டுக்களை அடுக்கடுக்காக அடுக்கி வைத்திருந்தேன். இரும்புப்பூட்டிட்ட, எஃகுப் பெட்டி

யில் தங்கக் கட்டிகளை நிறைத்திருந்தேன். என் பாட்டனும் பாட்டியும் அணிந்த அணிகளை, என் பேரனும் பேத்தியும் பார்த்து மகிழ, பாதுகாத்து வைத்திருந்தேன். எல்லாம் இழந்தேன். எறும்பும் எட்டிப்பார்க்க முடியாத என் மனையில், ஈக்குத் தெரியாத இருட்டறையில் வைத்திருந்த என் பொருள்கள் கொள்ளையிடப்பட்டுவிட்டன.

அய்யர்: இந்த திருட்டில், பெரிய சூழ்ச்சி இருக்கின்றது...

முதலியார்: சூழ்ச்சிக்கார நாய்களைக் கண்டு, மரக் கிளையில், தொங்கவிடவேண்டும். வாயற்ற நாய்கூட என் பெயரைக் கேட்டால் பயந்தோடும். டே...வீரா, நான் இல்லாத பொழுது, எந்தக் கழுதையடா நுழைந்தது என் அறையில்?

வீரன்: (பயந்து) எனக்கு தெரியாதுங்களே, எஜமான்!

முதலியார்: திருட்டுப் பயலே......உள்ளதைச் சொல்.

வீரன்: (நடுங்கிக்கொண்டு) நான் அப்பொழுது இங்கே இல்லீங்களே, எஜமான்.

முதலியார்: புளியமரத்தில் கட்டிவைத்து, உரித்துவிடுவேன். ஒளியாமல் சொல். எங்கு போயிருந்தாய்?

வீரன்: பனையூருக்குப் போயிருந்தேனுங்க கூத்து பார்க்க.

அய்யர்: வீரன் நல்லவன்; நம்பிக்கை உள்ளவன். உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யமாட்டான். நம் எதிரிகளின் ஏவலாலே இந்த திருட்டு நடைபெற்றிருக்க வேண்டும்.

முதலியார்: செய்திருப்பார்கள்...கைவரிசையைக் காட்டினார்கள், முடியவில்லை. வஞ்சம் தீர்த்துக்கொள்ள திருடியிருக்கலாம்.

அய்யர்: சந்தேகமே வேண்டாம். திருடுவது அவர்கள் நடத்தும் உரிமைப் போராட்டத்தின் ஒரு திட்டம்.

முதலியார்: பிஞ்சிலேயே கிள்ளி யெறிந்துவிடவேண்டும்!

அய்யர்: முதலில் போலீசாருக்கு தெரியப்படுத்து கிறேன். (வேகமாகப் போகிறார்.)

## காட்சி 29

[ஏராளர் கழகத்தில்]

சப்இன்ஸ்பெக்டர்: தாங்கள்தான் தமிழழகர் என்பவரா?

தமிழழகன்: ஆம். ஆட்சியாளர்களிடமிருந்து எனக்கு அழைப்பு வந்திருக்கின்றதா?

இன்ஸ்பெக்டர்: தங்களை கைது செய்திருக்கின்றேன்.

தமிழழகன்: கைது செய்யக் காரணம்?

இன்ஸ்பெக்டர்: விளாம்பட்டி ஜமீன்தார், வீரப்ப முதலியாரின் வீட்டில் திருடியதற்காக.

தமிழழகன்:(திடுக்கிட்டு) என்ன, திருடியதற்காகவா? ஐயோ அபாண்டம்! இது பொய்! முழுப் பொய்! எவர் கட்டி விட்ட கதை இது? இன்று காலையில்தானே நான் அலங்காரபுரியிலிருந்து திரும்பி வந்திருக்கிறேன். எத்தன் என்னை வீழ்த்த சதி செய்த திட்டம் இது! வஞ்சகன் தன் வஞ்சகத்தை தீர்த்துக்கொள்ள, வகுத்த வஞ்சகமிது! நாணயமற்றவன் என்று இந்த நாட்டு மக்கள் என்னை எள்ளிநகையாடச் செய்யும் தந்திரமிது. கொலைஞன் என்றாலும் ஒப்புக்கொள்வேன். நாட்டுமக்களை வாட்டி வதைத்தவனைக் கொல்ல கொலை வாளை ஏந்தினேன்! என்று பெருமைப்படுவேன். நான் திருடன்—சகிக்கமுடியாத குற்றச்சாட்டு! பிறர் பொருளைக் கொள்ள, உள்ளத்தால் உள்ளுதலும் தீதே என்ற பண்பைக் கொண்டவன் தமிழன். நான் திருடனா?...—என் வர்க்கத்தாரின் வரலாற்றிலே காட்ட முடியுமா?...நான் நிரபராதி — நிரபராதி. (தமிழழகன் கைது செய்யப்படுகிறான்.)

## காட்சி 30

சிகப்பி: (இதய எதிரொலி) என் கழுத்தை நெறிக்கப் போகும் ஏ கயிறே! நான் கொலைகாரி. என் கொலை செய்தேனென்று சிந்தித்துப் பார்த்தாயா?...விளாம் பட்டி வீரப்ப முதலி நச்சு மனப்பான்மை கொண்ட நல்ல பாம்பவன். இளங் குமரிகளை வேட்டையாடும் நாயவன். எண்ணிலா மக்களின் வாழ்வை, வறுமையால் வாட்டி வதைத்தவன். என் கணவனைக் கொன்ருன். எவனையோ ஏவி, என்னைக் கெடுக்கப்பார்த்தான். கட்டி யணைக்க வந்த கயவனைக் கொன்றேன். என் கற்பைக் காத்தேன். இது குற்றமா?...கொத்தவரும் பாம்பை வேலாலே குத்துவது குற்றமா?...கடிக்கவரும் நாயை கல்லால் எறிவது குற்றமா?...இந்த நாட்டுச் சட்டம் கூறுகின்றது குற்றமென்று. மக்களுக்காக சட்டமா? சட்டத்திற்காக மக்களா? சட்டம் என்னைச் சாடிவிட லாம். தூக்கிலே தொங்கவிடலாம். ஆனால், என் கல் லறை மேட்டிலே, சட்டம் சல்லி சல்லியாக்கப்படும். சட்டத்தைக் காக்கும் ஆட்சியும், ஆட்சியில் இருக்கும் அமைச்சும் அழிக்கப்படும். ஏ, தூக்குமேடையே! என்னைக் கொல்லப்போகின்ருய். உன் கோரப் பற் களால் என்னுயிரைக் குடிக்கப்போகின்ருய். கழுத்தை நெறித்து என்னுடலைச் சுவைக்கப்போகின்ருய். சுவைத் துப் பார், நன்ருகச் சுவைத்துப் பார். ஏழைகளின் துயர் நீக்க உழைத்த உடலை சுவைத்துப்பார். வீணனை எதிர்த்த வீராங்கனையின் உள்ளத்தை சுவைத்துப் பார். நாசத் துரோகிகளை, சூழ்ச்சிக்காரர்களை, நம் பிக்கை மோசம் செய்த நச்சுப் பாம்புகளை முத்தமிட வேண்டிய நீ, இந்த நாட்டின் கொடுமையை ஒழிக்கப் பாடுபட்ட என்னைக் கொல்லப்போகின்ருய்—கொன்று பார்! (சிகப்பி தூக்கிலிடப்படுகிருள்.)

* * *

## காட்சி 31

[ஏராளர் கழகத்தில் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருக்கிறன் எழிலழகன்.]

எழிலழகன்: 'சிகப்பி தூக்கிலிடப்பட்டாள்'........ஆ! இது என்ன...அநியாயம்! இந்த நாட்டிலே நீதிக்கு இடமில்லையா? மனசாட்சி மடிந்துவிட்டதா? மனிதத் தன்மை மறைந்துவிட்டதா?

ஒரு தோழர்: இனி நாம் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கமுடியாது.

எழிலழகன்: தோழர்களே! கிளம்புங்கள், அதர்மத்தைப் பரப்பும் ஆட்சியை ஒழிக்கக் கிளம்புங்கள்! அதன் ஆணி வேரைப் பிடுங்கி எறியக் கிளம்புங்கள்!

2-வது தோழர்: நம் உடல் தூக்கிலே தொங்கினாலும் சரி, துப்பாக்கி முனையிலே துளைத்தாலும் சரி, ஆட்சியை அழித்தே தீரவேண்டும்.

ஃ ஃ ஃ

[வீதி வழியாக]

(ஒருவன் மண்வெட்டியை தோளிலேபோட்டுக்கொண்டு செல்கின்றான். இன்னொருவன் எதிரே வருகின்றான்.)

ஒருவன்: சிகப்பியைத் தூக்கிவிட்டார்களாம்!

மற்றொருவன்: ஆ!...சிகப்பியைத் தூக்கிவிட்டார்களா! அநியாயம்!

ஒருவன்: அநியாயமா...?.... அனர்த்தத்தை தேடிக்கொண்டார்கள்!

ஃ ஃ ஃ

[குளத்தங்கரையில்]

ஒருத்தி: நம் சிகப்பி அக்காளை தூக்கிவிட்டார்களாம்.

மற்ருருத்தி: உங்கள் வீட்டிலே தீப்பிடிக்க! உலகத்தை ஓட்டி எங்களிலே ஒருத்தி இருந்தது, உங்களுக்குப் பொறுக்கவில்லையா ?

## காட்சி 32

[ஏராளர் கழகத்திலிருந்து கிளம்பியவர்களுடன் சிலர் சேர்ந்துகொண்டு வீதியில் செல்கின்றனர். அப்பொழுது மேலும் ஒரு கூட்டம் வந்து, அவர்களுடன் சேர்ந்துகொள்கிறது.]

எழிலழகன்: வீரர்களே! எழுச்சி பெற்று புரட்சி செய்யக் கிளம்பிவிட்டோம். கொடுங்கோன்மைச் சாக்காட்டை ஒழித்துக்கட்ட, குதித்தெழுந்துவிட்டோம். சுயநல மிக்க சோதாக் கூட்டத்தை, நயவஞ்சகத்தால் வாழும் நரிக் கூட்டத்தை, கோலாகலமாய் வாழும் குபேர கூட்டத்தை சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கவேண்டும். பேதமற்ற பெருவாழ்வை, ஏழை—பணக்காரன் இல்லாத சிங்கார வாழ்வை, சாதி பேதமற்ற சமத்துவ வாழ்வை, நாட்டில் நிலைநாட்டிட வேண்டும். அதற்காக நம் குருதியைக் கொட்டிடவேண்டும். உயிரை மடித்திடவேண்டும். புலிபோல் பாயுங்கள்! அலைபோல் மோதுங்கள்! காட்டுத் தீப்போல் பரவி, சுட்டுச் சுடுகாடாக்குங்கள்! திக்கெட்டும் புரட்சிப் பண் பாடுங்கள்!

பொது மக்கள் குரல்: புரட்சி ஓங்குக! புரட்சி ஓங்குக! (இப்பொழுது மற்ருெரு கூட்டம் கொடியைத் தூக்கிக் கொண்டு புரட்சி ஓங்குக, புரட்சிஓங்குக என்று முழக்கமிட்டுக்கொண்டு வந்து சேர்ந்துகொள்கின்றது.)

எழிலழகன்: சிறைச்சாலையை நோக்கிச்செல்லுங்கள். சிறையை உடைத்து, நம் தலைவர்களை விடுவிக்கவேண்டும்.

மக்கள்: வாருங்கள்......வாருங்கள்.

[சிறைச்சாலை முன்பு]

[மக்கள் கூட்டம் சிறைக் கதவை உடைக்கின்றது. ஏற்

கனவே அங்கு, பாதுகாப்பிற்காக இருந்த காவலாளர்கள் அடித்து வீழ்த்தப்படுகின்றனர். வல்லாளனும், தமிழழகனும் சிறையை விட்டு வெளியில் தப்பிவருகின்றனர். இந்த நேரத்தில் போலீசார் வந்துவிடுகின்றனர். இரு தரப்பினருக்கும் பலத்த போர். இரு தரப்பிலும் சிலர் சாய்கின்றனர். அதுசமயம் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். தமிழழகன் துப்பாக்கிக் குண்டால் துளைக்கப்பட்டு மடிகின்ருன். தமிழழகனைத் தூக்கிக்கொண்டு வல்லாளன் ஓட கூட்டம் சூழ்ந்து செல்கின்றது.]

## காட்சி 33

[ஜமீன்தார் மாளிகைக்குள் புரட்சிக்காரர்கள் நுழைகின்றனர். காசராமரும் வீரப்ப முதலியாரும் பேந்தப் பேந்த விழிக்கின்றனர்.]

வல்லாளன்: மக்களை வாட்டியெடுத்த ஒரு வீணனுக்குப் பெயர் கொடை வள்ளல்! கண்ணற்ற கபோதிக்கு கண்ணாயிரம் என்ற பட்டம்! பணத்தால் திமிர் பிடித்தாய்! புகழ் கொண்டுவிட்டதாகப் பூரித்து எக்காளமிட்டாய்! குமரிகளின் கற்பை சூரையாடினுய்! மதத்தைக் காட்டி மடத்தனம் செய்தாய்! உயிர்களைக் குடித்த கொலைகாரன் நீ!......என் விழிக்கிருய்? எங்கே உன் பணம்? எங்கே உன் வீரம்! எங்கே உன் தீரம்! பூச்சிகளிடம் வீரம் பேசிய புலியே! இனி உன் காட்டு ராசா ஆதிக்கம் செல்லாது.

முதலியார்: தடிப் பயல்கள், கோயில் காளைபோல் இத்தனை பேர் இருந்தும் இந்த வெறி நாய்களை விரட்டமுடியவில்லை!

காசராமர்: கோட்டையைப் பிடித்து, கொடியை நாட்டிவிட்டோமென்று துள்ளாதே!

வல்லாளன்: துள்ளுவதற்கு நான் என்ன புள்ளிமானு? அஞ்சா நெஞ்சனே—தனியகத் தளபதியை சுட்டு வீழ்த்தியது குற்றமில்லே? எண்ணற்ற பெண்களின் தாலியை அறுத்து சிறையிலே சுட்டுத் தள்ளியது குற்றமில்லே? ......யோகமும் மங்களமும் நெடுநாள் நீடிக்காது காசராமரே!...ஆளத் தெரியாது ஆண்டது ஒரு குற்றம்! ஆங்காங்கே குட்டிக் குபேரர்கள் காட்டு ராசா ஆதிக்கம் செய்ய வசதியளித்தது ஒரு குற்றம்! சட்டத்தை மதிக்காது மக்களே சங்கடப்படுத்திய சண்டாளர்களேத் தட்டிக் கேட்காதது ஒரு குற்றம். பஞ்சைகளின் பசியைப் போக்காமல் குடியரசே செய்ததாக கொம்மாளமடித்து சிறி விழுந்தது பெரிய குற்றம். இக் குற்றங்களுக்கு தக்க தண்டனே என்ன என்று தெரியுமா? மரணம்!—தூக்கு மேடையிலே, துப்பாக்கி முனேயிலே, விஷக் கோப்பையிலே, கட்டாரி முனேயிலே—என்று நீங்கள் நினேத்திருப்பீர்கள், நீங்கள் வகுத்துத் தந்த இந்த நாட்டு சட்டப்படி! அதுதான் இல்லே. நாங்கள் செய்வது ஒன்றுதான். உங்கள் அதிகாரம்—அந்தஸ்து, பவித்திரம்—பணத் தாட்டியம் முறிக்கப்படும். நாளே நீங்களும் பாட்டாளி வர்க்க அணியிலே!

எழிலழகன்: எங்கே அய்யர்? சாதிமதச் சாடை பேசி பொதுசுகபோகத்திற்கு பொல்லாங்குசெய்தபுரட்டன்! புல்லேந்தும் கை வாளேந்துமாமே! பார்க்கலாம், புறப்படுங்கள்! (காசராமரையும் முதலியாரையும் இழுத்துச் செல்கின்றனர்.)

பொதுக்குரல்: நாளேக் காலே கிழக்கு வெளுத்து இருள் கலேயும் வேளே, இந்த நாட்டு மக்களின் துயரும் கலேயும். மூடுபனி போன்று முக்காடிட்டிருந்த மூதேவிக்கூட்டமும் ஒழியும். சுதந்திரச் சூரியன் தோன்ற, சுயேச்சைத்தடாகத்தில்சமத்துவம், சமதர்மம், சமநீதி என்ற மலர்க்கூட்டம் மலர்ந்து மணம் வீசும்.

## காட்சி 34

[சாணக்கியர் மனையில்]

அய்யர்: இன்றே ஊரை விட்டுக் கிளம்பிவிடவேண்டும். பொழுது கிளம்பிவிட்டால் போக்கிரிகளின் கையில் சிக்கிக்கொள்வோம்.

அமுதம்: புரட்சிக்காரர்கள் ஊரையே வளைத்துக்கொண்டார்களாம், அப்பா! நாம் தப்புவது கடினம்.

அய்யர்: தப்புவது கடினம்தான்...ஆனல் தந்திரமாகத் தப்பவேண்டும்.

அமுதம்: ஆளை அடையாளம் தெரிந்துகொண்டால்......

அய்யர்: கற்பனை பண்ணுதே!....அடையாளம் தெரிந்துகொள்ள முடியாதவண்ணம், நாம் உருமாறிக்கொள்ள வேண்டும். நான் முக்காடிட்டு மூலிபோல உரு மாறுவேன். கண்ணிழந்த குருடிபோல் பாவனை பண்ணுவேன். ஆண் வேடம் பூண்டு நீ என்னை அழைத்துச் செல்லவேண்டும். பெண் வேடத்தில் நான், ஆண் வேடத்தில் நீ. நடிப்பு நன்ருய் இருக்கவேண்டும்.

அமுதம்: அருமையான திட்டம்...!...
[மாறு வேடத்தில்தப்பி வருகிருர்கள் சாலை வழியே]

அய்யர்: நல்லவேளை, தப்பி வந்துவிட்டோம்!

அமுதம்: நம் உயிர் தப்பியது தம்பிரான் புண்ணியந்தான்!

அய்யர்: கையில் சிக்கியிருந்தால், கசக்கி எறிந்திருப்பார்கள்!

அமுதம்: முதலியாரிடம் ஒரு வார்த்தையாவது......

அய்யர்: அவனுடல் மண்ணோடு கலந்து, மக்கிப்போயிருக்கும். கரையான்கள் அரிக்க ஆரம்பித்திருக்கும்.

அமுதம்: எவ்வளவு வளமிகுந்த நாடு! நம் வாழ்வுக்கு ஏற்ற நாடாக இருந்த தமிழ் நாட்டை விட்டு வந்துவிட்டோமே........

அய்யர்: நமக்குப் பயன்படாத நாடு மடியட்டும்! பூகம்பத்தால்அழியட்டும்.கடலில்மூழ்கிஒழியட்டும். குமரி நாட்டைக் கொன்ற ஏ, கொடுங் கடலே, நீ பொங்கி எழுந்து அழித்துவிடு! தமிழன் என்று ஒரு பூண்டும் இல்லாது ஒழித்துவிடு. ஏ இமயமே! நீ உருண்டுவந்து ஒழித்து விடு. ஏ வானமே! நீ இடிந்து வீழ்ந்து சுட்டெரித்து விடு. பேதியும் கொள்ளையும் பரவட்டும். பெரும் புயல் வீசட்டும். குன்றங்கள் வெடித்து குழம்புகளைக் கக்கட்டும். பெரும் வெள்ளம் பெருக்கெடுத்தோடட்டும். மக்கள் மடிந்து அழியட்டும். சாணக்கியன் இல்லாத நாடு சமுத்திரமாகட்டும்.

(இருவரும் மறைந்து செல்கிறார்கள்.)

## காட்சி 35

[கீழ் வானில் செம்பரிதி செக்கர் நிறக் காட்டில் மிதக்கின்றது—வானையளாவும் கொடிக் கம்பம்—அதன் உச்சியில் சுதந்திர புரட்சிக் கொடி ஆனந்தமாகப் பறக்கின்றது—அதனடியில் இந் நாட்டிற்காக, உயிர் நீத்த இரு தியாகிகளின் உருவம் அமைந்த ஓவியம்—மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிய மக்கள் கூட்டம், மலரிட்டு வணங்குகிறது இரு தியாகிகளையும்.]

வல்லாளள்: தமிழழகர்—சிகப்பியம்மையார், இத் தமிழகம் மறக்கமுடியாத இரு மாணிக்கங்கள். தாழ்ந்த தமிழகத்தைத் தட்டியெழுப்பி தம்முயிர் நீத்த தியாகிகள். மக்களாட்சியைக் கட்ட, அடிக் கல்லாக தங்களது எலும்புக் கூட்டைத் தந்த தீரர்கள். இந்த நாட்டின் எழுச்சிச் சின்னங்கள். மறைந்த மாவீரர்களுக்கு நாம் தலை வணங்குவோம்.

எழிலழகன்: மக்களாட்சி மலர்ந்துவிட்டது. இனி இந்த நாட்டில் ஏழையும்—கோழையும் இருக்க முடியாது. குபேரன்—கூலி யென்ற பேதமிருக்காது. சாதியும் சமயமும் சாய்ந்த சமத்துவ வாழ்வுதானிருக்கும். எளியோரைக் கொல்லும் வலியோரும், வலியோரின் வாய்ப்பட்ட மெலியோரும் இவையல்ல, நாம் இனி இன்பத் தமிழகத்தில் காணும் காட்சிகள். எலியோடு விளையாடும் பூனையும், பூனையோடு கொஞ்சும் பாம்பும், பாம்போடு கொஞ்சிப் பேசி மகிழும் கீரியும்தான் நாம் காணப்போகும் காட்சிகள். நாயோடு ஓநாயையொன்றாகச் சேர்ப்போம். சிறுத்தையோடு சிறு மானை கட்டிப் பிணைப்போம். நாட்டுக்கு நல்லதைச் செய்வோம்.

வாழ்க திராவிடம்!



293.2 84
823/84
1-A
2570

படித்துவிட்டீர்களா ?

"கலையின் போக்கு, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி ஜலதாரைகளைப் போல நீண்டுகொண்டே போகின்றது ! அந்தச் சாக்கடைக்கு சரியான போக்கிடம் சினிமா–ஏரி!"

சமுதாயக் கோணல்களை கேலி மொழிகளால்
அம்பலமாக்கும் 'வழிப்போக்கனின்'

# விளம்பர மோகினி

★ சினிமா சவுண்டிகளுக்கு ஒரு சவுக்கடி!

★ கலை வேடதாரிகளுக்கு ஒரு கல்லறை!

குறைந்த விலையில் நிறைந்த பக்கங்கள்! விலை 8 அணா

தயாராகிறது!

'வழிப்போக்கனின்' தேன்சுவைச் சித்திரம்

# காதல் கமிஷன்

தேன்கூடு பதிப்பகம்,

திருமங்கலம் (மதுரை மாவட்டம்)

Wrapper Printed at the RATHNA PRESS, Tirumangalam.